MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR
MADRAS
RAJAGOPAL PILLAI ... KANDAR KOVIL
அன்பளிப்பு
12529
(4081)

திருவானைக்கா

# அகிலாண்டவம்மை

## பிள்ளைத்தமிழ்.

இஃது

திரிசிரபுரம்-மகாவித்துவான்

**மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்**

பாடியது.

---

அஷ்டாவதானம்

**பூவை-கலியாணசுந்தரமுதலியார்**

அவர்களால்,

பரிசோதிக்கப்பட்டு,

திரிசிரபுரம்


தி-சபாபதிபிள்ளையவர்களால்

தமது

ஸ்ரீ மட்டுவார்குழலாம்பாளச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

நந்தன௵ கன்னிரவி



அகிலாண்டநாயகியம்மை.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

உ
சிவமயம்.

திருவானைக்கா

# அகிலாண்டவம்மை

## பிள்ளைத்தமிழ்.

பாயிரம்.

### விநாயகக்கடவுள்.

சீருலவுவனசமகள் புரையுமடவார்களிக
நீர்ந்தோமெனக்களிப்பச்
செறியுடுக்கணமுருவில்புத்தேடிகைப்பவிது
தீங்கவளமென்றுததிதோய்
காருலவுமாகநடு வட்பொலியுமாம்பலங்
காதன்மதிமீப்பனையெழிற்
காட்டுங்கைநீட்டுமொரு கோட்டிருபதத்திரி
கடாக்குஞ்சரத்தைநினைவாங்
கூருலவுகவரிலையயிற்படைசுமந்தவெங்
கோமானுடற்கண்வாமங்
கொண்டகொண்டற்குழற்கொவ்வைவாய்வெண்ணகைக்
கொம்மைமுலையம்மையைப்பூந்
தாருலவுபெரிங்கரிற்செங்கதிர்மயங்குமொரு
சம்புவனமமர்தேவியைச்
சகலவண்டமுமளிக் கும்பிராட்டியையுரைசெய்
தண்டமிழ்வளம்பெருகவே.

2529
(7081)

### பரமசிவம்.

தெள்ளமுதுடற்கூன்மதிக்குழவிகொட்டவெங்
தீயஞ்சரவுகொட்டச்
சேர்த்தசைக்குஞ்சடைமுடித்தண்டமிடியச்
சினந்தொலிக்குந்துடித்து
பள்ளவடவைக்கனற்றூங்குளிரியாணைப்
பருங்கறையடித்துரித்து
பாயுழைக்கைத்துழுத்தலைசேர்பண்டைத்துவெண்
ப்லிகொளிருகாண்குதோட்டு
*கள்ளவிதழிப்பூந்தொடைத்துறுதனறுசெங்
கட்டுமண்டொட்டகருமாக்
கழுனவரிதர்குமிருதாட்டெதுவதைப்பணிபு
கைகுவிப்பேமாறுகாற்

புள்ளமர்மலர்த்தெரியலார்தவளமாடமீப்.
போய்மதியைவான்யாற்றுவெண்
பூங்குமுதமலரொணுக்கைநீட்டுகொளவையம
பூந்தோகையைப்பாடவே (உ)

## பராசக்தி.

வேறு.

வெள்ளநெடுஞ்சடைமுடித்தாருடலப்பாதி
வியந்துகவர்ந்துலகமெலாமளித்தன்பாற்
ருள்ளமுழுவதுங்கவர்ந்து கொள்ளாநிற்கு
மொருத்திபொற்றுளருத்திகொண்டு ளிருத்திநிற்பா
மள்ளலெழுமுள்ளளைப்பூங்கமலக்காட்டி
லளிகளிழிந்துழுதுழக்கவழிதேனூறு
தெள்ளிமுதக்கடன்மடுக்குங்காவைமேவுஞ்
சிவஞானப்பிராட்டிதமிழ்செழிக்கவென்றே. (ங)

## விநாயகக்கடவுள்.

கோமேவுமதிலொருமூன் றெரிக்குஞான்றெங்
குனிமதிசெஞ்சடைச்செருகும்பெருமானன்பர்
நாமேவுதமிழ்க்கொருபூங்கொடிபாற்றாது
நடந்தநாயகன்விநாயகவென்றேத்தி
மாமேவுகதிர்க்காற்றேர்நடத்துமாறு
வருமடிகடிருவடிகள்வணக்கஞ்செய்வாம்
பூமேவுதிருக்காவைமேவுஞானப்
பூங்கோதைபாடல்வளம்பொலியவென்றே. (ச)

## சுப்பிரமணியக்கடவுள்.

வேறு.

இரசிதவிலங்கன்மிசையொழுகருவிபுனையவி
ரிருமருப்பாம்பன்மாரு
திழிமுக்கடாம்பொழியமென்சினைப்பைந்தரு
விளங்காநெறவுபொழியச்
சுரபிபல்வளன்பொழியவேமவுலகாளுமொரு
தோன்றன்மனையாட்டிகண்டஞ்
சூழுமங்கலநாணரு துறைகழித்துவே
ரெட்டவனையஞ்சலிப்பா
மூரகம்வல்விலங்குதடிநவ்விமுதலமலர்மே
லூரிவருகாலையிற்றன்
ஞெளிரவையவங்களிலொவ்வொன்று கண்டொவ்வொன்
றெருதுங்கி யவர்கையடையுவப்
பரமரிடமகலா திருந்ததுணையைப்பைம்
பசுந்தோகையைக்காவைவாழ்
பச்சைப்பசுங்கிளியைவாழ்த்துமெந்நாவுநாசெய்
பாடலில்வளம்பெருகவே. (ரு)

# பாயிரம்.

## நந்திதேவர்.

புள்ளேறுநேமியம்படையுடைக்குரிசிலும
பூந்தவிசுகந்துளோனும்
பொதுளுஞ்சினைத்தருநிழற்கோனுமமரரும்
புகறவருமெங்கோனவைக்
குள்ளேறுமாறுத வெனச்சிறியவாய்மொழி
யுரைத்தடரும்வேலையவர்வா
ளோங்குமணிமுடிசிதற வேத்திரப்படையெடுத்
தோச்சுவானைத்துதிசெய்வா
முள்ளேறுதாட்பா சடைக்கமலவாவியின்
முழங்கியவரால்வெடிகொள
மோட்டெருமைபாயுமொலிகேட்டுளநடுங்கியலை
முந்நீர்மடுத்துமடவார்
கள்ளேறுபைந்தொடை கொளைம்பால்கடுக்கக்
கறுத்தமுகில்வரையினேறுங்
நாவைப்பிராட்டிக்குரைக்குமெஞ்சிறியபுன்
கவியவள்செவிக்கேறவே. (௬)

## திருஞானசம்பந்தசுவாமிகள்.

தீயேறுகைத்தலத்தையரருளாற்பொருவில்
சிரபுரமறைச்செல்வரிற்
சிவபாதவிருதையர்தமதலையாய்ஞாநந்
தெவிட்டவுண்டாண்பனையெலாங்
காயேறவரவின்வாய்முள்ளெயிற்றிழிகொடுங்
கடுவேறவீந்தவொருவன்
கடத்திலுயிரேறவளவன்றிருமக்கட்குட்
களிப்பேறமதுரைநகர்வாய்ப்
பாயேறுமிடையுடைமுடைப்பறிதலைச்சமணர்
பதறவிடுமேடுகனலிற்
பைம்பசப்பேறவொருகுடிஞையெதிரேறவைப்
பதகர்வலியக்கழுவினிற்
போயேறவினியபதிகம்பாடுமையனடி
போற்றுவாம்வெண்ணுவலெம்
புண்ணியனிடப்பாக நண்ணியபிராட்டியைப்
புகழுமெங்கவிதழையவே (௭)

## அப்பர்சுவாமிகள்

அருங்கலைவிளங்குதிருவாமூரிலோங்குவே
ளாண்குலப்புகழனருக்
கணிதிலதவதியாருதித்தபினுதித்தறமி

கருங்கடல்கடந்துலகமுழுதுமொருகழலாற்
கடக்குமொரிலச்சினையுடன்
கவரிலைவைவேலிலச்சினையுமிருதோட்கட்
கலந்திடப்பெற்றெனையுமா

ளிருங்கருணையார்வீழிமிழலையிற்பொற்பீட
மெறிகாசெடுத்ததிருவாக்
கென்கோனடித்தலம்வழுத்துவேன்கோட்டெயிலி
லிட்டகொடிமுட்டநெடுவான்

வருங்கலைமதிக்குடல்கிழிந்திழியுமமுதமணி
மறுகுபெருகிக்கிடங்கர்
வாய்மடுக்குங்காவையம்மைக்குநாக்குமென்
வாய்த்தமிழ்வளம்பெருகவே. (அ)

## சுந்தரமூர்த்திசுவாமிகள்

மங்கலம்பொலிநாவலூர் மறைச்சடையனார்
மகவா யுதித்தெமிறைவன்
மணம்விலக்காவணங்காட்டிடவருட்டுறையுள்
வந்தருட்டுறையளவளாய்க்

கொங்கலர்குழற்பரவை குயமணைந்தினியதமிழ்
கூறியுடல்கொண்டுமுதலை
கொண்டபொருண்மீட்டுக்கடாத்திரிநடாத்துமெங்
கோமானையஞ்சலிப்பாஞ்

செங்கமலவங்கையிலிலங்கிழைகொண் மங்கையர்
திரட்டியம்மனையெடுத்துச்
செறிசுடர்கொணவமணிகுயிற்றுமணிமாடமேற்
சென்றிருந்தோச்சவமரர்

தங்களரகுருமுத்தாநமலைகவளமிது
தானெனநெடுங்கைநீட்டுந்
தண்காவையம்பிகைக்கடியேமுனாக்குமொண்
டமிழ்வளமிகப்பெருகவே. (கூ)

## மாணிக்கவாசகசுவாமிகள்

கடிமதில்வளைத்தகூடற்றென்பிலிற்றுமொண்
கண்ணிலிம்பற்கிருமையுங்
காட்டிவெம்புத்தர்களையோட்டிச்செங்கோன்செவி
க்ளிக்கவாக்கமுதமூட்டி

முடிவில்பரமாநந்தவெள்ளத்திரைக்கடலுண்
மூழ்கித்திளைத்திருந்த
முதல்வர்நந்திருவாதவூரடிகளடிக்களை

## பாயிரம்.

துடியிடைநயங்கண்டொதுங்கிமாசுணமண்
சுமக்கமுதிராவிளமுலைத்
துணைகண்டுடற்சிலம்புடல்வளையநெய்த்துநெரி
சுரிகுழற்கண்டுததிபோய்ப்
படியுமுகிலலறிவனைமுகடேறவிழிகண்டு
பிடையுறைபுகுந்தடங்கப்
பனிமலர்ச்சோலைதிகழ்காவைவருமிமயனன்
பாவைசொற்றமிழ்தழையவே. (௧௦)

### தண்டீசநாயனார்

வாரிசூழுலகுபுகழுந் திருச்சேய்ஞலூர்
மறைவாணர்குலம்விளங்க
வருமெச்சதத்தர்மருமானாவுதித்தரிய
மறைநான்குமோர்ந்துதெளிவாய்ச்
சீரிலகுசைவநெறியொழுகுஞான்றொருஞான்று
செங்கோக்குழாமருத்துந்
தேந்தளவனொருசுரபிமீப்பருந்தண்டாற்
சினந்தோச்சல்கண்டுதானே
யூரிலமராவினமொருங்கவொருகோலெடுத்
தோம்பிவயிறாரவூட்ட
வொழுகுதீம்பால்கொண்டு வானுகத்தாலெந்தை
யுருவுகண்டாட்டியொளிர்பைந்
தாரியையவிட்டஞ்சலித்துவருநாளிலத்
தந்தைதாளறவெறிந்தோன்
றனதாடுதிப்பமுயர்தண்காவையம்பிகை
தமிழ்க்குவளன்மிகவளரவே. (௧௧)

### திருத்தொண்டர்.

காயமனவாக்கொன்றமும்மலமொரீஇச்சைவ
காவியங்கற்றறிந்துங்
கனசரியைகிரியையோகாதி ஞானந்தேர்ந்து
கந்துமவ்வழிபயின்றுந்
தீயபிணியாம்பந்தபாசமூலங்கெடச்
சிதறியெனையாண்டமுக்கட்
செஞ்சடாடவியண்ணறிருவடியின்மருவிய
திருத்தொண்டரைப்பரவுவாந்
தோயநிறைபண்ணையினருக்கமலமலரைச்
சுரும்பலறிமுரலப்பசுங்
குட்டெடுகினமேங்கவளைகோட்டெருமை மேய்ந்துநெற்
கூற்பயிரைவாய்க்குதட்டிச்

சேயகுமுதத்தடம்பாயவத்தடவாளை
சேண்முகிற்கிண்டுபாயுந்
தென்காவைமேவும்பிராட்டிக்குரைக்குமென்
செந்தமிழ்நலம்பெருகவே. (கஉ)

அவையடக்கம்.

பொங்குமலைநீர்பருகுமொருமுனிவனமர்தரும்
பொதியத்திருந்தெழுந்து
புன்னைவீயின்றுதளைந்தவிளமென்சிறு
புதுத்தென்றல்வந்தரும்ப
வெங்குமொளிர்செந்தழலரும்புதேமாவட
ரொழிற்காவையம்பதியின்மே
வெம்பிராட்டிக்கியானுரைசெய்பிள்ளைக்கவியி
தென்போலிருக்குமென்னிற்
றங்குமூதறிவுடையசான்றோருறுந்தெய்வ
சைவநெறியொழுகுவோரின்
சங்கத்துமெய்ப்பொருளுணர்த்துநூல் புகலுவது
தான்கேட்டெழுந்துதீம்பால்
செங்குமுதவாயொழுகமந்தமந்தச்சென்று
தேருமக்கழகமுற்றோர்
சிறுமடல்கைபற்றியொருசிறுகுழவிகுழறுஞ்
சிறப்பினுக்கொக்குமன்றே. (கங)

பாயிரமுற்றும்.

---

# காப்புப்பருவம்.

## திருமால்.

பூமேவுவெண்ணுவனிமுலமர்முக்கட்
புராதனர்க்கின்பவெள்ளம்
பொங்கித்ததும்பிமீதிட்டுவழிதரவவர்
புரத்தொருப்புறத்தமர்ந்து
மாமேவுமண்டம்புரக்குமடமானையெழில்
வாய்த்தசெந்தேனையொளிர்செவ்
வாயனத்தைக்கருங்குயிலைப்பசுந்தோகை
மயிலைப்பரிந்துகாக்க
தேமேவுதுளபப்பெருங்காடளிக்குமிருள்
சித்துத்திசாதிசைதொறுஞ்
சேயொளிபரப்புங்கவுத்துவத்தொரு—
திருமார்புமுலைபொருந்தக்

கோமேவுமகவான்முதற்புலவர்மார்பவர்
குலக்கொடிகண்முலைபொருந்தக்
கொழுமுழுத்திண்கிரியையோராழியிடையிட்ட
கூராழியங்கைமுகிலே. (௯)

## சம்புநாயகர்.

வேறு.

மதிநதிதும்பைவாசவிதழிகரந்தைநாகம்
வளைசடைமுன்குலாவுபுண்டரக்கீற்றினர்
வழுதிமுனர்துவாயநரிபலகொண்டுதாவும்
வலியயமென்றுகூறியங்குறத்தோற்றினர்
மகரமலம்புநீரிலமரர்களஞ்சிவாடி
மறுகுறவந்தகாரிகண்டமட்டேற்றினர்
மறையிளொடங்கமாறும்வலவர்கலங்குறுவொர்
வடநிழலின்புறுவமர்ந்துறத்தேற்றினர்
கொதிகொள்சுரந்தண்மேவநிழல்விரிபந்தருமு
குளிர்புனல்கொண்டுசாலின்மொண்டெடுத்தூற்றினர்
குலமலைநின்றுதாழநலமலைவின்றிமேவு
கொடுமுடிதங்குமேருவிண்டெடுத்தாற்றினர்
குவிகையுடன்கணீர்கொடுருகுவர்துன்பமான
குவிதல்கொள்பஞ்சைவாரும்விஞ்சருட்காற்றினர்
குடபுலவர்திமாலுமுடனிறநம்பரீறில்
குணமலிசம்புநாதர்மென்கழற்போற்றுதும்
அதிகரசங்கண்மீறியருமையிதென்றுபேசு
மமுதையிகந்துபேசிடுங்குயிற்பேட்டினை
அனுதினமும்பராவிவழிபடுமன்பரான
வடியவர்கண்களாரநின்றமெய்க்காட்சியை
அவிர்கதிர்குன்றவீசுமணிகள்சுமந்தவாச
மலர்தருகொம்பையேடவிழ்ந்துமிக்கூற்றெழு
மருநறவுண்டிராகமிடறுதிறந்துபாடி
யளிகளிருந்துவாழ்சுகந்தநற்றூட்பொதி
வதியுமலங்கன்மேவுமளகவரம்பைமாதர்
வனசமிருந்தமாதர்கும்பிடத்தோற்றிய
மயிலைவளங்குலாவுமணியைவிளங்குசோதி
வடிவைநறும்படீர்குங்குமச்சேற்றனை
வனமுலைகொண்டுலாவுகொடியையிருண்டசோலை
மதுமடைவிண்டுபாயுமம்புயப்பூச்செறி
மதிலையலம்பிவாளைகமுகையடர்ந்துபாய
மலிவளமொன்றுகாவைமங்கையைக்காக்கவே. (௨)

## விநாயகக்கடவுள்.

### வேறு.

சீர்பூத்தவன்பரிடும்வெள்ளரிக்குலையைத்
திரட்டிச்சடைக்கண்வாரித்
தின்றுகருமாசுணமெனக்கூனன்மதிமுகிற்
செறியப்புழைக்கைநீட்டித்

தார்பூத்தவச்சடைக்கமலமொண்டுண்டுகட்
டழல்கண்டும்வெருவாதுதன்
றந்தையெனுவெந்தையிடமுலவுந்திருக்குஞ்
சரக்கன்றினைப்பணிகுவா

நீர்பூத்தமுள்ளரைப்பாசடைப்பூங்கமல
நிறைநறையிழிந்துபாய
நெட்டிதழவிழ்க்குமொருவட்டமலர்மாளிகையு
ணீங்காதிருந்துவாழுந்

தேர்பூத்தவல்குன்மடவாரிருவருந்தனைச்
சிந்திப்பர்கட்பொருந்தத்
திருக்கட்கடைப்பார்வைசெய்யுநன்காவையமர்
தேவியைக்காக்கவென்றே. (ரு)

## சுப்பிரமணியக்கடவுள்

### வேறு.

கறைவாய்கண்டத்தெம்பெருமான்
கரகங்கண[illegible]கள்கரந்துசடைக்
காட்டுழையமால்கரச்சங்
கத்துளவன்பாய்புகுந்தொளிக்கச்

சிறைவாய்மஞ்ஞைப்பரிநடத்தித்
தேம்பாய்தருவினிழற்பிறந்த
தெய்வக்களிற்றைமணஞ்செய்த
செவ்வேண்மலர்த்தாடலைக்கொள்வாந்

தறைவாய்மணிமுத்தலைகொழிக்குஞ்
சலதிமடுத்தகுண்மேகந்
தவழ்ந்துதிரிவதேய்ப்பமத
சூலமூன்றுடைமாதிரம்பயிலு

நறைவாய்வனத்துளுயர்ந்தெழும்வெண்
ணைவன்மருங்குமுளைத்ததுகிர்
நாகத்தொருபாற்படர்ந்தபச்சை
நறும்பூங்கொடியைப்புரக்கவென்றே. (சு)

## நான்முகன்·

வேறு.

ஒலிகெழுமலையலைபருமுத்தாக்குட
முறழ்வரிவளைவயிறுமிழ்பொற்
றுவகையொடெழுமொருமதியைப்போற்கய
லுகண்மகிழ்வெழுபசுமைச்சூட்டனம்
வலியயமெனநணிகடவிச்சீர்ச்சித
மலர்மிசைவதியுமொரோகினப்பேட்டினை
மறையுறைகடையடையெனவைத்தாற்றிய
மலர்தருமலர்மகனுவகைப்பூத்தவன்
புலியதளிடையிடைசுலவக்கூக்குரல்
புரிபரிபுரமடியலறப்பாப்பணி
பொலிதரமுழவொடுபுவிவிட்போற்றிடு
பொதுவினிடமிமழுவைத்தூக்கிய
மலிசடையவர்மகிழ்துணையைத்தீத்தொழில்
வலியவென்முடிமிசையடியைச்சூட்டிய
மணியைமென்மலர்விரிகொடியைப்பூத்தொளிர்
மதகரிவனமவருமயிலைக்காக்கவே. (௫)

## இந்திரன்.

வேறு.

மோகத்தையாங்கொண்டபோதெலாமிக்கின்ப
முனியாதளிக்குமிவடன்
மொய்குழனுசுப்புமுலைசொற்பகைகளிவையெண
முராரிமகிழ்வெய்தவேறி
மேகத்தையோட்டித்திசாதிசைதிரிந்தலைய
மின்னைத்துரத்தியோங்கும்
வெற்பைத்துணித்தமுதைவாய்ப்பெய்துதருநீழல்
மேவுமொருகடவுள்காக்க
நாகத்தைவாங்கியபிரானியற்பகைமனையை
நண்ணியதுமதிலிலங்கை
நாதன்மனைவிக்கின்பநல்கியதுமொருபூவ
ணத்தடைந்ததுமிராவிற்
பூகத்தையனையகந்தாமாதுபாற்றூது
போனதுமுளோர்ந்திடைவிடாப்
புந்திச்சிறைப்படுத்தொளிர்காவைமேவுநம
புண்ணியப்பூங்கொம்பையே. (௬)

## இலக்குமிதேவி.

முத்தநகைவிதுமுகப்பொதுவியர்கடப்பநன்
முழுக்கவன்றுழ்வலித்து
மூங்கிலவாடந்தடிந்துமனைபுக்குண்
முனிந்தவர்பின்றித்தறையுமவன்

மத்தடிபொறுத்துவருதுணைமுகிலையுண்டுகண்
வளர்ந்துறைதியென்றுதன்னை
வயிறுளைந்தீன்றவொருபாற்கடற்குடியாக்கு
மடமானையஞ்சலிப்பாம்
கொத்தவிரமத்தமணிவெண்பொற்பிறங்கற்
குலாவும்பெருங்களிற்றைக்
கூடிப்பயந்தவொருகோட்டடன்மழக்கன்று
கூடிவிளையாடநாடி
யத்தவுலகுக்களிறுபாறவீறேறுமத
வத்தியாரணியமேவு
மமையம்பிறங்கவளரிமையம்பிறந்தபிடி
யைக்காத்தளிக்கவென்றே. (எ)

கலைமகள்.

வாவியம்போருகமலர்த்தவிசுறுங்கடவுள்
வாக்கினுமெனுக்கினுநறு
வழியுஞ்சிதத்தகட்டேடவிழ்க்குங்கமல
மனையினுங்குடிகொண்டபொற்
றாவிசெந்தோலடிகருங்கடல்கொழித்தசெந்
துகிரனையவாய்பசும்பொற்
சூட்டெகினமேறும்வெண்பேட்டெகினமலர்மென்
றுணைத்தாடுதித்துநிற்பாம்.
காவியைமுனிந்துசண்பகமீக்குதித்தொளிர்
கனங்குழையைமோதிடுங்கட்
கட்பிலிற்றுந்தெரியல்சூழ்ந்தளிகண்முரலக்
கனங்கதறவாட்டுமைம்பாற்
றேவியைச்சகலவுலகும்புரக்கும்பெருஞ்
செல்வியைக்கருணைபூத்த
திருவைத்தடம்பணைத்தென்காவையம்மையைத்
தினமும்புரக்கவென்றே (அ)

காவிரி.

விரிவுற்றபையராநண்ணுலகுமண்ணுலகும்
விண்ணுலகுநன்குகாக்க
வெற்றிகொடெடுத்தெண்கைத்தலையின்முத்தலைய
வேல்பரித்திறுமாந்துநீங்
கருவிற்பொலப்பெயரனைத்தெறப்பொற்றறி
யகட்டைக்கிழித்தெழும்பே
ராளரிதிகைக்கவொருகோளரியுகைத்திவரும்
யாளிப்பிணைவளிக்க
செருவற்றொடுங்கிக்கருஞ்சுரும்பிட்டவிற்
செஞ்சுவைத்தண்டனிறவெண்
டிரிபுண்டரத்தநுதல்வெம்புலிங்கங்கொட்டு

மருவிப்பன்மான்கண் மதர்நோக்கமறியச்சூழ
மற்றுமொருமான்வயிற்று
வந்தகுறமான்முறைபொருந்தமுக்கடமான்
வனத்துவருமடமானையே. (க)

## சத்தமாதர்கள்.

வேறு.

அனமிசையேறியுலாவற்றெடுத்தவ
ளடுபுலிகீறியதோல்வைத்துடுத்தவ
ளசுரகுலாதிபர்சாயப்படுத்தவ
ளலைகடனீரழலாகக்கடுத்தவ
ளினமடர்பாறையொர்கோடிட்டெடுத்தவ
ளிறையொடுமாமலையேகற்றடுத்தவ
ளெரிகவர்வேல்கொடுகாவற்கடுத்தவ
ளெனுமெழுமாதர்கடாளைத்துதிக்குதுங்
கனமலிவாய்வரல்போலச்சினத்தெழு
கடமிழிதோல்வரவோதைப்பரிப்படை
கட்லலைபோல்வரமேருக்கிரிப்புரை
கதிர்விடுதேர்வரவீரப்படையப்படை
வனம்வரவானவர்பாறக்கறுத்தெதிர்
வருமொருதாருகனோடத்துரத்திய
மதலையுலாவுகவானுத்தமப்பொழில்
வளமலிகாவைநன்மாதைப்புரக்கவே. (க0)

## முப்பத்துமூவர்.

வேறு.

வேலையினுதித்தவிடம்வைத்தகிரிபத்தனெளி
தற்புக்களிப்போடுகாணவெதிர்நிற்பவு
மேவிரதமுக்கனிசருக்கரைமுதற்சுவைகள்
கைப்பத்தமிழ்ப்பாடல்நாநனிகொழிப்பவும்
வீறுயுசிவத்தலநடக்கநடைகற்றில
னெனப்பெற்றநற்றுதைதோளிடைபரிப்பவும்
வீழிமிழலைப்பதியெனப்பன்மணியப்புபடி
வைத்திட்டபொற்காசுநாடொறுமெடுப்பவு
மாலைமதிவைத்தகுடிலப்பரனெனச்சிவிகை
பெற்றுத்தொனிக்காளமோடுகுநடத்தவு
மாமறைவனக்கதவமெய்ப்புகழொச்சமு
னடைப்பச்சிறப்பூறுவாயமுதுகொட்டவும்
வாரிலைகண்மொய்த்தபுருடப்பனையிலப்பொழுது
கொத்துக்குலைக்காய்குலாவவருள்வைப்பவு
மீதாரசிக்குமொர்குலச்சிறைதனக்குமுறு
வப்பப்பொறித்தோலைகாணுபுவியப்பவுங்

காலைவருசெக்கதிர்கடுப்பவொர்கடத்துறுவெ
ளொற்புக்குணத்தோமொர்துருவெடுப்பவுங்
நாணியிதெனக்கொண்மடனிற்செறுநர்வைத்ததம
வெப்பத்தழற்சீறிமாறனுடறைப்பவுங்
காய்சினவழற்குண்மடல்பச்செனவெடுத்துவளை
கொட்பப்பெருக்கேறுநீரொதிர்செலுத்தவுங்
காருடலுடைப்பறிதலைச்சமணர்மூற்றநெடும்
விட்டொட்டமூட்டாருமீயிவரவைப்பவும்
சோலைபுடைசூற்றுமதுரைப்பதிமுதற்பதிமு
மூக்கத்தழைத்தோகைநீறுகைகுழைபபவுந
தோமில்புகலிக்குரிசிலுக்கமுதளித்தகுயி
லைப்பொற்றகட்டுமாமணிகுயிற்றிடுஞ்
சூழெயின்மதக்கரிவனத்தமரனத்தையிரு
செப்புத்தனப்பாரமாமயிலைநித்தலுஞ்
சூரியர்மருத்துவருருத்திரர்வசுக்களெனு
மூப்பத்துமுக்கோடிதேவர்கள்புரக்கவே. (கக)

காப்புப்பருவ முற்றும்.

---

## செங்கீரைப்பருவம்.

பங்கயமலர்த்திவருசெங்கதிர்நிறத்தவுடல்
பனிமதிநிறங்கொள்ளாது
படரரிமதர்த்தகண்குழியாதுநாடிகள்
பசந்துநாறுதுநுனைவாய்க்
கொங்கைகள்கறுதுமட்சுவைநாப்பெறுதகடு
குழையாதுறுதினம்பல்
குறியடாதருமையொடுயிர்த்திமையமாதேவி
குளிர்புனல்பொன்வளைகுளிறிடும்
அங்கையினெடுத்தாட்டிநீறிட்டுமட்காப்
பணிந்தொழுகுதிருமுலைப்பா
லார்வமொடருத்தவுண்டயறவழ்ந்தேறிமலை
யரையன்புயத்தவன்பொற்
செங்கைவிரல்சிரமீதுபற்றிநின்றுமெயில்
செங்கீரையாடியருளே
தென்காவையம்பதிசெழிக்கவருமெனனம்மை
செங்கீரையாடியருளே. (க)

காராமொடமலிகூட்டில்பொன்மாலை
கைநின்றிழிந்துவண்மடிக்
கட்டவழ்தல்கண்டுவந்தம்மைவரவென்றிரு

தாராடுமார்பனிருகுழையிருகைபற்றியத்
தடமார்புதாழ்ந்தொளிரும்வெண்
டண்டரளமாலையினிருந்துமற்றோர்மாலை
தாளுதைந்தூசலாடி
வாராடுமிருமுலைசுமந்தமடவார்தொடா
வளரும்முலைசுமந்து
வாளூடுமுதல்பலநாட்டுங்கயற்கட்டி
வடகயிலைசென்றுபொதுவிற்
சீராடுமெந்தையொடுபோராடுமொருபூவை
செங்கீரையாடியருளே
தென்காவையம்பதிசெழிக்கவருமென்னமமை
செங்கீரையாடியருளே.

12529
(1904)

கற்றிணிதடம்புயக்காருடற்றிமிலர்மீன்
கையுறையளிப்பவாங்கிக்
காவல்புரிநெய்தலங்கண்ணியனளாவிக்
கடற்றுகிர்படர்ந்தமனையிற்
பொற்றிகழ்முலைச்சிலைசுமந்திடைநுடங்கவாள்
பொருவுதங்கட்பகையெனுப்
புலான்மீனுணக்குதறணந்துமுகமன்பல
புகன்றுமகிழ்குரவைகுழறிச்
சுற்றியெம்பெருமான்குடம்பைதோட்சூட்டச்
சுருவிலைப்பைம்பொற்கலன்
சூட்டிவலைமுடியமுண்மடற்றுழையம்போது
சுரிகுழற்குறமுடித்துச்
சிற்றிடையளத்தியர்கள்கொண்டாடுமொருமங்கை
செங்கீரையாடியருளே
தென்காவையம்பதிசெழிக்கவருமென்னம்மை
செங்கீரையாடியருளே. (௩)

MAHAMAHOPADHYAYA (உ)
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
MADRAS
THIRUVANMIYUR

அஞ்சியயருங்கமலமின்றடலுடைத்தா
யடர்த்ததெனநாணியுடல்கூ
னுகியமதிக்கொழுநனைக்கண்டரற்றிடு
மரக்காம்பன்மானமணிவாய்
வெஞ்சினஞ்சிறிதெழலினூற்சின்மொழிகழறவவண்
விரவரவுதுவளலேய்ப்ப
மின்னிடைதளாடமந்தாகினியெனும்பெயரள்
வெள்ளிடைதவழ்ந்துமால
மஞ்சினொளிபாய்புயவரைக்கட்டவழ்ந்துமகன்
மார்பவெண்பொடிகளைத்தும்
வண்ணைகலாழ்கழிதலையுகுர்தும்றுகச்சடை
[illegible]

செஞ்சிலம்போலிடுமடிக்கமலநீட்டினவள்
செங்கீரையாடியருளே
தென்காவையம்பதிசெழிக்கவருமென்னம்மை
செங்கீரையாடியருளே. (ச)

நந்தாதசெல்வச்சிலம்பரசன்மனையாட்டி
நகிலொழுகுபாலுண்டுபுன்
னகைநாறவவள்வாயுமிழ்ந்துந்துகிற்பாவை
நயமொழிமொழிந்தெடுத்து
வந்தாவல்பூண்டணியணிந்துந்தருப்பாவை
வல்லிடையின்மெல்லிடைத்தான்
வனையுமென்சிறுசீரைசுற்றியும்மதிலாடி
மன்னுநிழலைக்கூவியுஞ்
சந்தார்திருத்தாதையகன்மார்புழக்கித்
தவழ்ந்தும்விளையாட்டயர்தல்போற்
றண்காந்தளங்கைகணிலத்துறமிர்த்துமந்
தாகினிப்புனலலம்புஞ்
செந்தாமரைச்சரண்கோட்டிப்பிராட்டிநீ
செங்கீரையாடியருளே
தென்காவையம்பதிசெழிக்கவருமென்னம்மை
செங்கீரையாடியருளே. (ரு)

வேறு.

கெண்டையிரண்டுமருண்டொருமுள்ளரி கிடந்துநடந்தாடக்
கெளிறொருபதுநிலமகளைவிடாது கிளர்ந்துதளர்ந்தாடக்
கொண்டறிரண்டொளிருச்சியின்மீது குவிந்துகவிந்தாடக்
குமுதமலர்ந்தபொன்முளரிபிறந்தெழு குறுவெண்மணியாடத்
துண்டுபடுங்கலைமதியிற்கட்டிய சுட்டியசைந்தாடச்
சூழ்ந்திருகாந்தளடிப்படிவண்டு சுழன்றுமுரன்றாட
அண்டமனைத்துமுயிர்த்தபொலன்கொடி யாடுகசெங்கீரை
அத்திவனத்தமரத்தரிடத்தவ ளாடுகசெங்கீரை. (சு)

பாதசதங்கைபுலம்புசிலம்பு பதிந்துபொதிந்தாடப்
பால்வளையிற்சுடராசைகுயிற்றிய பல்சுடர்மணியாடக்
காதளவுங்கயன்மோதுநறுங்குமிழ் கதுவியமுத்தாடக்
ககனத்திடைபொலிமின்னலின்மின்னிய கனவிரிசிகையாடத்
தாதவிழ்நறுமென் குமுதத்தமுதொடு தழைகுறுநகையாடத்
தழைதருமரகதநிழல்விரிமேனித் தண்ணெனுமொளியாட
ஆதவனொளியெனவென்னுட்பொலிபவ ளாடுகசெங்கீரை
அத்திவனத்தமரத்தரிடத்தவ ளாடுகசெங்கீரை (எ)

மருங்கனையாடைகைவெங்கிட்டுதையா மலரடிகன்றுமே
வாயமுதூறலளித்தவிரற்படு மண்ணெனுவெண்ணுமே

கருங்குயின்மென்குரல்விம்மிப்பொருமிக் கம்மிப்போகாமே
　　கயலின்முத்தெனநுண்டுளிமுத்திரு கட்கயல்சிந்தாமே
சுருங்குமருங்குறுவண்டறவுந்தித் தொந்திததும்பாமே
　　சூழ்சுடர்மேனிப்புழுதிபொருந்தத் தொட்டுமண்ணளையாமே
அருங்கலைமேகலையாகவணிந்தவ ளாடுகசெங்கீரை
　　அத்திவனத்தமரத்தரிடத்தவ ளாடுகசெங்கீரை. (௮)

வேறு.

கடல்சுவறிடவடவுடல்வரைபொடிபடல்கண்டோடுங்காலன்
　　கடவியமுதுபகடடியொடிபடவெரிகண்காலும்பிறைப்
படவரவுடலடல்விடநெடுநிலமகள்பண்பாடுங்கீதம்
　　பயிறுளவுழவனைமுனிதரவமரர்பயந்தீரொன்றேல
மிடவிளமுளரியில்வளர்பவன்முதலியரொந்தாயெங்கோவே
　　யெனமுனர்வருமசுரர்கள்பொடிபடவலியெஞ்சாநின்றோர்வேல்
திடமொடுதொடுமொருமதலையையுதவினள்செங்கோசெங்கீரை
　　சினமுடைமதகரிவனம்வருமொருமயில்செங்கோசெங்கீரை.

வேறு.

நெக்குருகிக்கசிவுற்றவர்கட்டணிநின்றுடுந்தோகாய்
　　நெட்டுடலப்பணகத்தலைநிற்குநிலந்தாழும்பாவாய்
மைக்கருமெய்ப்புயல்பிற்பொலிவுற்றுவரும்பூமென்கோதாய்
　　மட்டுவிரித்தெனுளக்கமலத்துறும்வண்டேதண்டேனே
அக்கரவப்பணிமுக்கணர்பக்கலமர்ந்தீரைந்தாறே
　　டத்தொகைபெற்றவறத்தைவளர்க்குமணங்கேகொங்கேறுஞ்
செக்கமலத்தைநகைக்குமுகக்குயில்செங்கோசெங்கீரை
　　சித்தியளித்திடுமத்திவனத்தவள்செங்கோசெங்கீரை. (௧0)

செங்கீரைப்பருவ முற்றும்.

---

## தாலப்பருவம்.

சேற்றுமணிகள்சலஞ்சலங்கள்சிதறிச்சிலம்பஞிமிறலறச்
　　செந்தாமரையின்வெள்ளிமுளைசிந்தித்தெரிக்கச்சினைவாளை
நாற்றுவயலிற்குதிக்கவளைநடுவட்கயல்களொளிக்கநடு
　　நடுங்கிக்கமடஞ்சுரிக்கவாளைரம்புரண்டுதுடிக்கமது
வூற்றுங்குமுதம்படைச்சாலினூடேயரையக்கருங்கடைஞ
　　ருழும்வெம்பகட்டையுரப்பமலையும்பர்காரத்தையவர்செவிக்கண்
ணேற்றும்பழனச்செழுங்காவையென்றாய்தாலோதாலேலோ.
　　எல்லாவுலகுஞ்சராசரமுமீன்றாய்தாலோதாலேலோ. (௧)

அரும்புமுலைச்சிற்றிடைநுடங்கியசையப்பரித்தகடைசியர்க
　　ளலர்வாய்நறவுங்குயம்பாளையரியுநறவுமருந்துமள்ளர்
கரும்புவடித்ததீஞ்சாறுகதலிப்படப்பைபுகுந்துநெடுங்
　　கமுகம்படப்பையுலவியிளங்கன்னற்படப்பைத்தூரகழ்ந்து
சுருமபுமடுக்குமுளரிமடுச்சுருங்கப்பெருகிச்சலதியுவர்த்
　　தோயங்கலக்காமஙின்மேய்ந்துசொரியும்புவனமினிப்புலறிற்

திரும்புவனந்தாழ்வயற்காவையென்றாய்தாலோதாலேலோ
எல்லாவுலகுஞ்சராசரமுமீன்றாய்தாலோதாலேலோ. (௨)

நெரிந்துசரிந்துநெய்த்திருண்டுநீண்டுசுருண்டுமகரந்த
நிமிரத்திமிர்ந்துநறியபனிநீரினனைந்தகுழன்மடவார்
புரிந்துகுடையுமணமஞ்சட்படுநீர்பாய்ந்துதழைத்தசெழும்
படப்பைக்கதலிப்பசுங்குருத்தொண்பருதிக்கடவுடனைமுடுக்கி
விரிந்துபடுக்கநிலம்படுத்தமென்பூந்தருத்தேன்மிஞிறருந்தி
மிடறுதிறந்துபாண்மிழற்றவிளைப்பங்கயந்துஞ்சணந்துயிலா
திரிந்துமறுகும்வயற்காவையென்றாய்தாலோதாலேலோ
எல்லாவுலகுஞ்சராசரமுமீன்றாய்தாலோதாலேலோ. (௩)

உடுக்கும்படங்கவுகள்கயலாவொற்றையாழிவையமுமிந்
தூருமொளிர்மானமும்விளையவோடுங்கலமாச்சலராசி
மடுக்குங்கனங்கள்பச்சொளிச்சைவலமாவொளிகள்சலஞ்சலமா
மருவிமிதப்பவுடற்கண்ணன்மனையூற்றெடுப்பவுயர்ந்துமால்
படுக்கும்பாயல்பின்னேடப்பயத்தன்பயத்தனுகவுடற்
பரியமகாஞ்சரியவலைபாய்ந்துபாரையகழ்ந்துபெருக்
கெடுக்கும்பொன்னித்தடங்காவையென்றாய்தாலோதாலேலோ
எல்லாவுலகுஞ்சராசரமுமீன்றாய்தாலோதாலேலோ. (௪)

கங்குலனையகுழற்காட்டுக்கலாபத்தோகைகடுப்பாருங்
கருங்கண்மழவேறனையாருங்கலவிப்பூசலயரவனை
கொங்குமலிதேமலர்மாலைகொட்டுந்துகளுஞ்சிதறுசுண்ணக்
குவையுநறுங்குங்குமத்தூளுங் குண்டுக்கிடங்கர்நிரைதூர்த்துப்
பொங்குமதவெண்டிகையானைப்புழைக்கைமடுத்துக்கோட்டெயின்மீப்
பொலியுங்கொடிகள்கிழித்தவழிப்புயல்வான்புகுந்துபொன்னுலக
மெங்குமணக்குந்திருக்காவையென்றாய்தாலோதாலேலோ
எல்லாவுலகுஞ்சராசரமுமீன்றாய்தாலோதாலேலோ. (௫)

வேறு.

இரசிதவரையமர்பவளவிலங்கலிடம்படர்பைங்கொடியே
யிமையவர்மகிழ்வொடுபுகழுஞ்சிமையத்திமையம்வரும்பிடியே
சரணினைபவருட்டிமிரஞ்சிதறச்சாருமிளங்கதிரோ
சுதும்மறைபானுமளப்பரிதானதயங்குபொல்லாமணியே
மரகதவரையிளகியவெழிலெனவெழில்வாய்த்தசெழுஞ்சுடரோ
மதுரிதநவரசமொழுகக்கனியும்வளத்தநறுங்கனியே
தரணியிசைப்பொலிதருமக்குயிலேதாலோதாலேலோ
தழையுந்தங்கிவனத்தமர்மயிலேதாலோதாலேலோ. (௬)

அங்கம்புளகுற்றுருகுவரிதயத்தவிரும்விளக்கொளியே
யறிதற்கரியபரஞ்சுடராயவெனையர்க்கொருதுணையே
பொங்குங்கதிர்மணியணிகள்சமந்தவிர்புண்ணியமென்கொடியே

கொங்குந்திணர்விரியைந்தொடைவிம்பர்குலத்துறுசெந்தேனே
கோகனகச்சினகரமொருவாவிருகோதையருக்காசே
திங்குங்கருணைமலர்ந்தெழுகொம்பேதாலோதாலேலோ
தழையுந்தந்திவனத்தமர்மயிலேதாலோதாலேலோ. (எ)

வேறு.

சயிலத்தரையற்கொருபுத்திரியேவாஞளவார்தாயே
தழலைத்தருகட்பரமற்றுணையேநாயேன்மாவாழ்வே
கயலைக்கடிவைக்கணையைக்கவிஞர்மாகாவார்கார்சேர்
கடலைப்பிணையைக்கடிகிக்குழைதோய்காதோடேமோர்தா
வுயர்பொற்குமிழிற்குதியுற்றொளிகூர்கோமானேதேனே
யுவமித்திடெற்கருமைக்குயிலேதூயோராய்மாயா
மயலற்றவருட்படுமெய்ப்பொருளேதாலோதாலேலோ
மதவெற்பமர்பொற்பதியுத்தமியேதாலோதாலேலோ. (அ)

வேறு.

தானநதம்படுவெண்கரிதாழாவீழாமே
தானவர்மங்கையர்மங்கலநீணாள்வாழாமே
வானவர்நங்கையரங்கைகள்வார்மேன்மோதாமே
வாள்விழியஞ்சசிவன்றுயரூடேபோதாமே
தேன்மலிபைந்துணரைந்தருவார்வேர்காயாமே
தேகமடங்கலுமம்பகனார்போய்மாயாமே
கான்முனையொன்றருளபைங்கிளிதாலோதாலேலோ
காவையமர்ந்தகருங்குயில்தாலோதாலேலோ. (கூ)

வேறு.

இருவர்க்கரியவெனப்பனிடத்தவள்தாலோதாலேலோ
இமையத்தலைவனுயிர்த்தமடப்பிடிதாலோதாலேலோ
கருணைக்கடல்பெருகப்பொலிகட்குயில்தாலோதாலேலோ
களகப்பிடரிவரத்தியளித்தவள்தாலோதாலேலோ
பொருனைத்துறையர்குலத்தைவிளக்கினள்தாலோதாலேலோ
புணரித்துறைவருபுத்தமுதொத்தவள்தாலோதாலேலோ
மருமிக்கெழுதுளவற்பினுதித்தவள்தாலோதாலேலோ
மதவெற்பமரும்வனத்தமர்பொற்கொடிதாலோதாலேலோ. (க0)

தாலப்பருவமுற்றும்.

---

## சப்பாணிப்பருவம்.

செய்யதேமலர்மருவுநீலத்திறெண்காந்தள்
சேர்ந்தெனப்பின்கூழைவரய்ச்
செங்கையொன்றுறவோருக்கிருகடன்மறக்கத்
தெரிந்தனளெனப்பொறிணைய்ர

னெய்யுமோர்பைந்துழாய்க்கோலிருகைசேமித்த
தெறுழதன்றொருகையிவள்
இருகோன்மறைத்தவிநன்றுநன்றெனமகிழ
மெந்தையொடுமகிழநறவம்
பெய்யுநாண்மூவுரிமலர்வலியவொருகமலம்
பிறந்தகித்தையடையும்
பெற்றிபோற்சிற்றிடைநுடங்கக்கடங்தால்
பிறங்கல்வழுதிப்பொன்மலையிற்
றையலார்மைக்கண்புதைக்குங்கைசேர்த்தம்மை
சப்பாணிகொட்டியருளே
தண்ணாவலோர்புகழும்வெண்ணாவலூரரசி
சப்பாணிகொட்டியருளே. (க)

கந்தமலிநெட்டிதழவிழ்க்கும்வெண்டாமரைக்
கவின்மயிலுமுவரிபடியுங்
காளமேகத்திருகத்துமோகத்தெண்
கடற்கட்சனித்தகுயிலும்
வந்திருமருங்குநின்றைம்பான்முடித்துநறு
மாலைசெருகிக்குனிநுதல்
மணநாந்தந்தூரியங்கொண்டுதீட்டிமதர்
மாழையுண்கட்குமையிட்
டந்தரமடந்தையர்பணிந்துபுடைசூழமணி
யணிபலவணிந்துநெடுவா
னளவியமணக்காவணத்திருத்தத்தழன்மு
ணாவணைக்கரையனெனுமுன்
றந்தைதரவெந்தையார்தொட்டகைமுகிழ்த்தம்மை
சப்பாணிகொட்டியருளே
தண்ணாவலோர்புகழும்வெண்ணாவலூரரசி
சப்பாணிகொட்டியருளே. (உ)

கலைமணக்குங்கொடிக்கொருபீடமானநாக்
கடவுளொருவாதமர்ந்த
கமலபீடமுமகிலமகளிடைபொதிந்தபூங்
கலைவயிறுளைந்துயிர்த்த
சிலைமணக்குஞ்சிறுநுதற்சினகரப்பூஞ்
செழுங்கவாடந்திறக்குந்
திறவுகோலைச்செங்கருங்காளவரவெனச்
சென்றொளிகவர்ந்தபடையா
னலைமணக்குந்திருப்பாற்கடலும்வேற்கணயி
ராணியின்பந்திலைக்கு
மண்ணலைத்தாங்குசிறுகண்ணைநற்கோட்டுவெள்ள
னாகவிச்சிலம்பனினாட்

டலைமணகுமபடிவணங்குவர்க்கருள்கைகொடு
சப்பாணிகொட்டியருளே
தண்ணுவலோர்புகழும்வெண்ணுவலூரரசி
சப்பாணிகொட்டியருளே. (௩)

அருமறைக்கிழவன்முதலைவருக்குந்தொழில்க
ளாந்தெண்ணலளவைசெய்ய
வைவிரல்படைத்தகையாற்சுட்டிளுேடவர்க்
கத்தொழிற்காட்டுங்கையாற்
பருமுலைமருப்புறவளைக்குறிபடத்துகிர்ப்
பட்டகோடீரமுடியெம்
பரமனைத்தழுவுங்கையால்வளரறங்கண்முப்
பத்திரண்டும்புரிகையாற்
குருமணிகுயிற்றியவிருங்கங்கணக்கையாற்
கொடியேனையஞ்சலென்ற
கோலக்கையான்மடப்பொய்தற்பிஞக்களொடு
குளிர்பனிவரைச்சோலைதண்
டருநறவுகொட்டுமலர்கொய்யுங்கையாலம்மை
சப்பாணிகொட்டியருளே
தண்ணுவலோர்புகழும்வெண்ணுவலூரரசி
சப்பாணிகொட்டியருளே. (௪)

பாகமுறவம்மைநினைவைத்தவெம்மான்கரப்
பால்வைத்தமான்மருண்ட
பார்வைகொண்டதுகொலைச்சிலைவேடுகூடும்
பருப்பதந்தோறுமாடு
மேகமுறழுங்குழற்சிறுகுறவர்சிறுமிவாய்
மிக்கமோகப்புலவுலாம்
வேற்குழவியெனுமருகனருகுறைவதற்கன்று
விரவிநங்கைப்பட்டதா
லேகவரிதெனநினைத்தன்றுஞலெனவொளி
ரிணைக்கண்முகருணைவெள்ள
மெங்கும்பரந்தப்பரற்குமீதிட்டடிய
ரிருவினையைவாரியோடக்
கோகனகமதின்முளைத்தாலெனப்பொலிகையாற
கொட்டியருள்சப்பாணியே
கொடிவிரவுகடிமதிற்காவைமிமையப்பாவை
கொட்டியருள்சப்பாணியே. (௫)

வெள்ளனமெனத்தமிழ்க்கூடல்வாழ்சைதவன்
விழுப்பெறவுதித்தெதிர்த்த
வளைத்தமிழ்க்குறைதீர்த்தவெம்மானளவில்

தெள்ளலில்கலாநிலாமேலாக்கிமலையவெற்
பீந்தநினரும்புமென்காற்
கிறையாக்கிவெம்பாரிடஞ்சூழுமெனனாற
விழிநிம்பமாலையீந்து
கள்ளவிழிலம்புகுத்தையலாராயங்
கலந்துபுடைசூழமுடியிற்
கவின்முடிதரித்தரியணைக்கண்வைத்திருகயல்
களிக்கநோக்காவொருகயல்
கொள்ளெனவிரும்பிக்கொடுத்தகைசெவப்புறக்
கொட்டியருள்சப்பாணியே
கொடிவிரவுகடிமதிற்காவைமிமையப்பாவை
கொட்டியருள்சப்பாணியே. (௬)

வேறு.

அரவப்புரிபுரமேகலைபம்பியலம்பிப்பதறாமே
அம்போருகமொடுவெம்போரிடுகரமணிவளைசிதறாமே
யிரவிற்பொலிமதிவகிரிற்சுட்டியிரிந்ததுபிறழாமே
யியல்பன்றியுமிருகாமலர்சேந்தடலேறிக்கன்றாமே
பரவைக்கடல்சுலவுலகினிலலகில்பவக்கடல்வீழ்ந்துழலும்
பயனில்லாவெனைவழிவழியடிமைபடைத்தபிரான்மகிழுங்
குரவக்குழவித்துயின்றகரங்கொடுகொட்டுகசப்பாணி
கொம்புபடைத்தசிலம்புவனத்தவள்கொட்டுகசப்பாணி. (௭)

எங்கள்பிரானடிவைத்தகருத்தரிடர்க்கடல்வீழாமே
யெறிதிரைபடுமொருகுடிஞையின்மறைமடலெதிரலதேறாமே
வெங்கனறங்குமடத்துறுதூமம்விரித்துமுழங்காமே
மெய்யுள்குலச்சிறைநட்டநுனைக்கழுவீணைப்போகாமே
அங்கமலம்புசிலம்புகலந்தமெல்லடியலதாகாமே
அரவொலிமலிசிரபுரம்வருகுழவிக்கருண்ஞாங்கலவாக்
கொங்கைசுரந்திழிபாலமுதூட்டினள்கொட்டுகசப்பாணி
கொம்புபடைத்தசிலம்புவனத்தவள்கொட்டுகசப்பாணி. (௮)

வேறு.

மும்மலக்கருளறவொருவினர்மனனெனுமற்புதறச்சாரு
முளரிச்சததளவிளமலருளிவிளரிப்பண்மிழற்றேதைப்
பமரக்குலமுடியடிபடிதாமதுமிக்கபெருக்கூறும்
பதிபச்சடையுடைமறைமடல்புரையடிவைப்பவடுப்பார
மமர்பொற்கிரியெனவளரிளமுலைகள்பரித்தெழுபொற்பாவை
யமலச்சுடரிடமருவியவொருகொடிபுத்தமுதப்பூவை
கமலக்குயில்புணர்குயில்வரவருகுயில்கொட்டுகசப்பாணி
காட்டுக்கடம்பிழ்கடகரிவனமயில்கொட்டுகசப்பாணி. (௯)

வேறு.

மலையெனவளரிருபாரப்பூண்முலைவனிதையர்குடைபணிநீர்கட்டமனை

வரிவளைவயிறுளைவாகிக்கான்மணிநிலவொளியலகினிலாவொப்பாகவிக்
மலர்தருகயிரவவூறற்றேறல்மணத்தபணைக்கோடித்
தலைமடையகடுவிராவிக்கீறிமுண்மடலொடுசுலவியதாழைத்தூர்முறி
தரவெறியலையொடுவேள்கைச்சாபவனத்தைநனைத்தேறத்
தனியுருளிரதநடாவற்சார்பிலனெழுபரிபசியமெய்கீறித்தோகைக
டழையவிணளவியதாலக்கானைமடித்துமுழுக்காலை
அலையெறிபிரசமிடாவிற்பாய்பொழுதிரிசிறுதுளிபிரவாகக்காவிரி
யலைபடவொழுகியவோதைக்கேயுணடுக்கமெடுத்தோடி
யருகொருகுளனிளமேதிச்சூன்முகிணிரைவிழவெருவுவரானெட்டடவி
ழயல்வளர்கதலிகள்சாயப்பாசுநிறத்தமடற்பூகக்
குலைமிடறொடிபடவாணிற்போயதென்முதிர்பலனுதிர்தரமோதித்தா
குதிகொளும்வளமலியானைக்காமயில்கொட்டுகசப்பாணி [வொடு
குனகழலடிபடிவாழ்விற்கூடியமனனுடையவென்முடிமீதிற்சூடிய
குனிமதிவதிசடையாருக்கோர்துணைகொட்டுகசப்பாணி. (க0)

சப்பாணிப்பருவமுற்றும்.

---

## முத்தப்பருவம்.

கோதிக்குங்கவைச்செங்கொழுந்தழற்கட்குளிக்குமெழுகோத்துருகியறக்
குழைந்துகசிந்துகரஞ்சிரமேற்குவித்துக்கொழுநாத்தழும்பேறத்
துதிக்குமடியாருளக்கோயிற்றூண்டாவிளக்கேமெய்ஞ்ஞானச்
சுடரோயமலச்சுடர்க்கொருவாத்துணையேயிணையின்மணியேய
திதிக்குமொருகாசிபற்கும்வருஞ்சிறுவர்பணிந்துகரங்கூப்புஞ்
சிலந்திபணிந்தநகரில்வளர்செழும்பூங்கொம்பேசிரபுரச்சந்
ததிக்குமுலைப்பான்முன்னளித்தாயேமுத்தந்தருகவே
சயிலத்தனையன்றவத்திலவதரித்தாய்முத்தந்தருகவே. (க)

கன்னேருள்ளங்கரைந்துருகக்கரைவித்தொருபைந்தருவறைந்த
கருந்தாதாணியெனக்கசிவுகாணக்கடையேன்றனைப்புரந்த
பொன்னேபளகற்றொளிகாலும்பொல்லாமணியேமெய்ஞ்ஞானப்
பொருளேயருளெண்ணான்கறமும்பூத்தகொடியேபொற்கொம்பே
மின்னேமழலைப்பசுங்கிளியேவெள்ளோதிமமேகருங்குயிலே
வேம்பர்குடிக்கோர்செங்கரும்பேவெள்ளைநாவலடிமுளைத்த
தன்னேரிலிக்குத்துணைவருமென்றாயேமுத்தந்தருகவே
சயிலத்தனையன்றவத்திலவதரித்தாய்முத்தந்தருகவே. (உ)

பொங்குங்கருணைப்புதுவெள்ளப்புணரியெழுந்துதிரையெறிந்து
பொறிபோநெறியிலுளஞ்செலுத்தாப்புனிதவடியர்சூழாமடுக்க
வெங்கும்பரந்துபெருக்கேறவெனையாள்வாதவூரடிக [கக்
ளியற்செந்தமிழின்னமுதருந்துமெய்கோன்செவிகள்குளிர்தூங்
கொங்குந்திணர்கொள்பொங்கர்வனக்குயிலுண்பொருந்தமதர்நோக்கத்
கொள்ளாவதனங்கோட்டிநறுங்குதலைததும்பப்பேசுநற்றத்
தங்குங்குமுதமலர்வாயாற்றாயேமுத்தந்தருகவே

போர்தார்கினதுபொன்னடியிற்புரமூன்றெரித்தவெம்மிறைவன்
புலவித்தீர்ப்பான்வணங்கமுடிப்பொலியுங்குடிலத்துளிர்க்கொடியுங்
காதார்வளையுங்குழட்டுமேற்காணப்பாந்துபெருக்கெடுத்த
கங்கைப்புணரிநாறுமறிக்கலையைச்சிறிதுகண்ணுற்று
மீதார்நாணுற்றவுண்சிறிதுமென்றுட்கமலஞ்சுருங்கமகிழ்
வேரிக்குமுதமலர்கடுப்பவெள்ளிமுறுவல்சிறிதரும்பு
தாதார்தளவஞ்செறிவாயாற்றுயேமுத்தந்தருகவே
தாணப்பொருப்புவனந்தழையத்தழைந்தாய்முத்தந்தருகவே. (௪)

வண்ணங்கரியமுகிலுயிர்த்தமணிமுத்தம்மேநீயுயிர்த்த
மணிமுன்றளைந்துபிணிக்கவுருமாறிப்போனமுத்தமலை
நணணம்புவரிமுளைத்தமதிளளிர்முத்தொளிர்முத்தமிழ்க்குரிய
நால்வர்க்கசைக்குமைந்தலையுன்றுதனடிகடேய்த்தமுத்தம்
வெண்ணந்துமிழ்வெண்முத்துநெடுவேயின்முத்துநின்முனெச்சில்
விரவியிருப்பதவையார்க்குவேண்டுமடியேம்விருமபிடநின்
றண்ணங்குமுதமலர்வாயாற்றுயேமுத்தந்தருகவே
தாணப்பொருப்புவனந்தழையத்தழைந்தாய்முத்தந்தருகவே (௫)

வேறு.

கையடிபுடைத்தெழுமருப்புப்பொருப்புக்
களிற்றைக்கிழித்துநெடிய
கன்னலிற்கயிற்கனன்றுறுதனுறுசெங்
கட்டழலையிட்டுமிடைவாய்ப்
பையடியினுனிவால்பொருந்திடமுறுக்கிவெம்
பாம்பைப்பிணித்துமடலவாய்
பரியவெறுழிக்குறுங்கோட்டினைமுறித்தும்
பயக்குருகினிறகொடுங்கார்
மையடிபடச்சடைக்காட்டினிடைபோட்டுநின்
மணவாளனென்னுமுக்கண்
வானவனிவ்வண்ணம்வெண்டாளங்களுக்கொவ்வொர்
மாசுறச்செய்தவதனால்
மெய்யடியர்நசையாகிவேண்டுவனவருளுவைநின்,
விழிவாய்முத்தமருளே
வெண்ணுவலடிவளர்கரும்பினைவிரும்புகொடி
விழிவாய்முத்தமருளே. (௬)

கடியவிழ்நனைக்கண்டகப்பசியநெட்டிலைக்
கண்டலம்போதுமதராக்
கள்ளுறுபுன்னைமலருக்குறவையர்தீலி
கட்டுங்களச்சிறுமியர்
முடியிசை...விலை...ிடைவிடைக்கிடை,
முறம்...வைழயவாரிவாரி
முருகு...மலரு...விழ...புல்லுமெழில்
...ய...சன்மனையில்

வெடிபடவொராற்படவுடற்றிருகின்றலையில்
வீசுவலையுதையமதியும்
விரவவமுதளவலாற்றேன்சாறெனச்சொலியம்
மீன்சாறுபருகுக்கருஞ்
செடியுடலரிறையருளுமுத்தமருள்மையொரு
செம்பவளமுத்தமருளே
செம்புநாயகரிடம்விரும்புநாயகிநினது
செம்பவளமுத்தமருளே. (எ)

துடிகொண்டகொடியிடைதுவண்டுகுடிவாங்கச்
சுரும்பர்பண்மிழற்றுங்கருஞ்
சுருளோதியிமயமாதேவிகச்சிட்டுச்
சுமந்தமுலைமந்தரத்திற்
கடிகொண்டவெண்டரளநிலவொளிநிலாவெனக்
காலுமொளிகிரணமென்னக்
கருதிச்சகோரம்புகுந்ததுகடுப்பவொண்
கவினுசிமோதியள்ளும்
படிகொண்டதிவலையெனமுத்தொன்றுதூங்குமப்
பைங்குமிழ்த்துண்டமொளிர்சண்
பகமெனநினைந்துவிழிவண்டுகடைபிறழப்
பசுங்குதலைவாய்மடுத்துக்
குடிகொண்டபாலருவியுண்டசிறுபெண்பிள்ளை
கொவ்வைவாய்முத்தமருளே
கொம்புவளைபம்புவனவம்பிகைவிரும்பிநின்
கொவ்வைவாய்முத்தமருளே. (அ)

வேறு.

வெப்பவனற்சினம்வைத்ததரக்கையுரித்தவதட்புனையா
விட்பரவப்படிமட்சுவைபெற்றகனைப்புறனிட்டெழிலார்
தப்பின்மதிக்கலைநெக்குவிதிர்த்தமுதத்தையுகுத்திடவோ
தப்புனல்வெட்கமருத்தையெடுத்தயில்கட்செவியைப்பணியாத்
துப்புறழ்பொற்சடையைச்சுமைகட்டியிறுக்கிமுடித்தொளிகா
றுத்தியரக்கயிறிட்டுவளைத்தொருபொற்கிரியைச்சுமவா
முப்புரமுற்றெறுமுத்தரிடத்தவள்முத்தமளித்தருளே
முத்தியளித்திடுமெத்திவனத்தவள்முத்தமளித்தருளே. (கூ)

வேறு.

சிரபுரச்சந்ததிதழைக்கமுலைகொடுத்ததலைவி முத்தந்தருகவே
திருமகட்குங்கலைமகட்குமெழில்சிறக்குமிறைவி முத்தந்தருகவே
தருணிமுற்றுந்தனிதழைக்கவணிபுரக்குமமலை முத்தந்தருகவே
சடைமுடித்தம்பியைவிருப்பமுடனுயிர்த்தவிமலை முத்தந்தருகவே
மரகதப்பொன்னிமயவெற்புவிளைதழைக்கும்வடிவி முத்தந்தருகவே
மழைமுகிற்கண்டெழுபகத்தமடமயிற்குயிலாள் முத்தந்தருகவே

உரகபொற்கங்கணரிடத்துமருவுசத்திகௌரிமுத்தந்தருகவே
உரலடிக்குஞ்சரவனத்துமெனதுளத்துமுறைவள்முத்தந்தருகவே

முத்தப்பருவமுற்றும்.

---

## வாரானைப்பருவம்.

செம்பொற்பிறங்கலைவலஞ்சூழுமமுதவெண்
டிங்கள்செந்தீக்கருங்கட்
செவியஞ்சியாம்பல்புக்கொளிகால்வதெனநின்வாய்த்
தெண்ணிலாமுறுவல்பூப்பக்
கம்பக்களிற்றுரியர்கட்சுடரிலங்கியைக்
கைத்தலைவிருத்திமதியைக்
கங்கைமுடிவைத்தல்போல்வையாமைகண்டுசெங்
கதிர்நினதுசெவிபுகுந்தோர்
கும்பத்தனஞ்சடையிடைக்கரந்தார்நினது
கொழுநரெனமொழிதலைய்ப்பக்
குழைத்தோடிலங்கமணிமேகலைசிலம்பக்
குழைந்திளங்கொடிதளாட
அம்பொற்சிலம்பலறமுரலவுரலடிவனத்
தமரிளம்பிடிவருகவே
அகிலாண்டமுழுவதுமுயிர்த்துமெழின்முதிராமுதி
ராதபூங்கொடிவருகவே. (க)

வெஞ்சினமுறுத்திப்பதங்கவெண்கிரணவாள்
வீசித்துணிக்கவீய்ந்து
வீய்ந்தெழுமிராக்குலமிகற்களியுறும்பாக்கல்
விரிசுடர்க்குறவுபூண்ட
கஞ்சமலர்முன்பணிபுமுறையிடுதலைய்ப்புவவிர்
கனகலோகத்தரிவைமார்
கழல்பெயர்க்குந்தொறுமளிக்குலமுழக்குதங்
காரளகபாரமோதக்
குஞ்சரவதட்பாமர்கோடீரமுடிகண்டு
கொள்வான்விரும்பியதலாற்
கோலநடைபயில்வதுங்கற்பான்விரும்பியெழில்
கூர்மென்சிறைப்பவளவாய்
அஞ்சநின்னடிதொடரும்வண்ணமுரலடிவனத்
தமரிளம்பிடிவருகவே
அகிலாண்டமுழுவதுமுயிர்த்துமெழின்முதிரமுதி
ராதபூங்கொடிவருகவே. (உ)

எண்ணரியசெஞ்சடைமுடக்கற்கலாநிலவொ
டெழுதிவெண்கோடிணைப்ப
வெழும்வெள்ளிமுழுமதியெனக்கொடியுமெட்டா
வெட்டிக்கழுத்தைநீட்டி

வண்ணமிகுநின்சாயல்கண்டுளநடுக்கிமஞை
மலரோன்றலைப்புகுங்கால்
வாலினடியுண்டசிற்றிடையுடைத்தன்னுமைவின்
மண்செவிடுபடவிரட்டத்
தண்ணமுதமதிமான்வெருண்டிடமருண்டுகைத்
தனிமானெழுந்துதுள்ளத்
தழையறுதெடுத்துநீவாவெனுமுனின்விழி
தனைக்கண்டொடுங்கவெனையாள்
அண்ணலிட்மொருவியப்பயருமாலடிவனத்
தமரிளம்பிடிவருகவே
அகிலாண்டமுழுவதுமுயிர்த்துமெழின்முதிரமுதி
ராதபூங்கொடிவருகவே. (௧)

12529
(1041)

கடியவிளஞாயிறுகடுப்பவவிர்மணியணிக்
கற்றையொளிசுற்றவற்றுக்
கட்கடல்பிறந்தகருணைப்புணரிநீத்தமெழு
கடன்மடைதிறந்தடேய்ப்பக்
கொடியனமருங்குலருகித்துவண்டெய்த்தாணி
குழைவாங்கியேங்கவீங்குங்
கொங்கைகள்சுமந்துமடவார்தனிவராருயிர்க்
கொழுநர்விட்டென்பதால்வெண்
பொடிவிரவுசெம்புயமலைக்கட்கொலைத்தொழிற்
பொங்குவெங்காரியில்கும்
புழைவாளெயிற்றரவுபூண்டழுக்கட்டிரி
புராந்தகக்கொழுநர்துணைகொண்
டடியர்மிடிதீரவருமமுதமாலடிவனத்
தமரிளம்பிடிவருகவே
அகிலாண்டமுழுவதுமுயிர்த்துமெழின்முதிரமுதி
ராதபூங்கொடிவருகவே. (௨)

கடக்குஞ்சரம்பொருதுமொலியுமினோர்கடவு
கவனவாம்பரியமலையுங்
கரியவிருள்சரிப்புச்செவந்துதயமெழுமெழு
கடும்பசிக்கவரியேபோ
னடக்குந்தடந்தேருருட்டரவமுங்கடி
நலங்கெழுமியத்தமாமு
நவிர்மூத்தலைக்கடவுயிடவுடைக்கருமஞ்சு
நாணத்தடிக்கும்வேலை
வடக்குங்குமக்கொங்கைமாதரொழிலாநமு
மலர்ப்பகழியானைவென்ற
மந்தரோடிச்சினங்கொளிர்மணிப்பணிகண்
மறுகெறியவெழுமோதையே

அடக்குந்திருப்பொலிவளக்கொளுாலடிவனத்
தமரிளம்பிடிவருகவே
அகிலாண்டமுழுவதுமுயிர்த்துமெழின்மூதிராமுதி
ராதபூங்கொடிவருகவே. (ரு)

வேறு.

பொன்னைப்புணருமகன்மார்பப்புயலும்புயறேய்கடலுலகம்
பூத்தசுருதிநாத்தலனும்போற்றிபோற்றியெனத்தோற்றி
மின்னைபபொருவுநசுப்பொசியவிலங்கற்பொருவுமுலைசுமந்த
மின்னார்மாயக்கடல்வீழ்ந்துவெறும்பொய்யுடலைவேட்டுவந்த
என்னைத்தனதுவசத்தாக்கிபிறப்புப்பிறப்பென்கடல்வீழா
தெடுத்துத்தடுத்தாட்கொண்டவண்டரிளைக்குமிதழியிலம்பகத்
மன்னைத்தனதுவசத்தாக்குமயிலேவருகவருகவே [தோண்
மதமாதங்கவனத்துமடமானேவருகவருகவே. (சா)

பருத்தாரமுங்குங்குமச்சேறும்பம்பவிணங்கிச்சுணங்கரும்பப்
பணைத்துத்தடித்துப்புடைத்தமுலைப்பாரஞ்சுமந்தகொடியசைபத்
தருத்தாருலகுமுதலானசகலவுலகுஞ்சராசரமுஞ்
சற்றேயசையவசைவில்லான்றனுமசையச்சுரர்க்கமுத
மருத்தாவிடமுண்டுவந்தவந்தவையன்கரந்தொட்டிடச்சிலைமே
லலரிபுனையுஞ்சிலம்பவிரவலர்ந்தவடியேன்முடிக்கேறு
மருத்தாமரைமென்மலர்பெயர்த்துமயிலேவ்ருகவருகவே
மதமாதங்கவனத்துமடமானேவருகவருகவே. (எ)

வேலையலம்பக்கருஞ்சுரும்பர்விளரியலம்பிமுளரிவிட்டு
மென்பூங்குமுதவீயலம்பவிரியுஞ்சிறகர்க்குருகினங்கள
காலையலம்பப்பொலிகதிர்மேற்கடல்போய்விழவெள்ளியநிலவுக்
கற்றைபரப்புமதியைமுககமலங்காட்டிவாட்டியபூஞ்
சோலையலம்பும்பைங்கிளியேசுகமாரின்பப்பெருங்கடலே
சொல்லற்கரியமறைப்பொருளேதுளிக்கும்பிரசத்துளபநறு
மாலையலம்புங்குயிற்கிளையமயிலேவருகவருகவே
மதமாதங்கவனத்துமடமானேவருகவருகவே. (அ)

ஒன்றுந்திமிரக்கருள்றவென்னுள்ளத்தொளிருமொளிவிளக்கே
யுருகிப்பெருகுங்கண்ணீரொன்றுகதியழுந்திப்பதைபதைத்துக
கன்றுமடியாருளத்தின்பங்கனியக்கனியுமெய்ஞ்ஞானக்
கனியேநனியாநவரசமுங்கலந்துகாட்டுஞ்செழுந்தேனே
என்றுபுனையுமணிப்பொறைகொண்டெழும்பூங்கொம்பேயிளைத்தெடுக்கு
மின்பட்வெருக்கேழுருக்கவிர்மெல்லிதழ்ப்பூங்குயிலேயிமைக்கும்பொன
மன்றுணடனத்தனையாட்டுமயிலேவருகவருகவே
மதமாதங்கவனத்துமடமானேவருகவருகவே. (கூ)

பொன்னேவருகவுலகும்பூத்தாய்வருகாயேனைப்
பூரந்தாய்வருகவழுதியர்கோன்புதல்விவருகவுமிற்கிளைய
மின்னேவருகமெய்ஞ்ஞானிகளேவருகமறைநாவின்
விரிவேவருகபேரின்பவினைவேவருகமீகங்கண்ணே

யன்னேவருகவகநெகுவார்க்கணித்தாய்வருகவலர்மடவார்க்
கரசேவருகவுமைப்பருஞ்சிரம்மேவருகவழற்கரத்து
மன்னேருடலம்பகிர்ந்தவிளமயிலேவருகவருகவே
மதமாதங்கவனத்துமடமானேவருகவருகவே. (க0)

வாரானைப்பருவ முற்றும்.

---

## அம்புலிப்பருவம்.

புன்னைவீயார்தருநெடுங்கோட்டுமோதிப்
பொருங்கடலுதித்தலானும்
புன்சிறுமறுச்சிறுவிதிக்குறவுபூண்டுபின்
போதப்பகைத்தலானும்
பின்னைவாழ்செந்தாமரைக்கோயில்சாயவொளி
பெறுமுகங்காட்டலானும்
பெட்பினிமமாதிரந்தவழவரலானும்வெம்
பேய்க்கூத்துவந்தபெருமான்
மின்னையேய்செஞ்சடைமுடிப்பொற்குகங்கைமகள்
வெருவரவுழக்கலானும்
வேம்பர்கள்குலம்புகழவருதலானுங்குலவி
விளையாடநின்னையெங்கள்
அன்னைவாவென்றனடனக்கொப்பெனக்கருதி
யம்புலீயாடவாவே
அம்புவனமும்மைதருசம்புவனவம்மையுட
னம்புலீயாடவாவே. (க)

தும்பியுரிபோர்த்தவருடற்பாதிகொள்ளலாற்
றுள்ளுமீனுதரித்துத்
தோன்றலாலத்திரிதவத்திற்பிறத்தலாற்
றுகடீர்குணம்பொலிதலால்
வெம்பிவருசெங்கதிர்காந்திடப்பூவொளி
விரித்தலாற்குமுறுசங்க
மேகத்துடன்றோன்றிவருதலாற்குமுதவாய்
விரியவெண்ணகைகாட்டலாற்
பம்பியகார்க்குழலளித்தலால்வெள்ளிப்
பருப்புமுத்துயிர்த்தலானும்
பகாதிருனென்சேயளித்தலாற்றண்ணளி
பயத்தலாற்கலைசிலவெம்
அம்பிகையினக்குநிகராதலாற்றன்னுடன்
யம்புலீயாடவாவே
அம்புவனமும்மைதருசம்புவனவம்மையுட
னம்புலீயாடவாவே. (உ)

இலைவந்தகமலந்திரட்டலல்லாதுநிரை
யெற்றுகமலந்திரட்டா
யெழிலாம்பல்பூத்தலருவாயன்றியொருமருப்
பேராம்பல்பூத்துளாராய்
கொலைவந்தநாகத்தினுக்கமுதமல்லாது
குளிர்நாகவமுதமாகாய்
கொம்பனையருக்காசைதரலன்றியென்மருங்
குடிகொள்ளுமாசைதாராய்
கலைவந்தநிறைமதியெனப்பொலிவையடியரைக்
காக்குநிறைமதியுமனதோ
கயிரவநகைக்கவருகருளொளிநினக்குமிக்
காளிவளஃதறியாய்கொலோ
அலைவந்தநங்கைதொழுமலைவந்தமங்கையுட
னம்புலீயாடவாவே
அம்புவனமும்மைதருசம்புவனவம்மையுட
னம்புலீயாடவாவே. (௩)

மத்தமதவானைமுலைமணமாதர்வாய்பேசு
வசைகளேற்றுந்திரிந்தாய்
மாலெச்சிலைச்சுற்றுமுனியெச்சிறேன்றியொரு
மாசுணத்தெச்சிலானாய்
தத்தமனதின்படிசகம்பேசவாசான்
றனக்கும்பிழைத்துநின்றாய்
தண்கலைநிலாவெனப்பலர்வெறுக்கக்கதிர்செல்
சமயந்தெரிந்துவருவா
யித்தனைகளங்கநின்பாற்பொதிதல்கண்டுமோ
ரேசிலாரைக்கூவலிங்
கெங்கள்பெருமாட்டிநினைவம்மெனக்கூவிட்
வியற்றுமாதவமென்றுன்னினம்
அத்தர்கயிலாசமுதீசர்மணவாட்டியுட
னம்புலீயாடவாவே
அம்புவனமும்மைதருசம்புவனவம்மையுட்
னம்புலீயாடவாவே. (௪)

நீரேற்றதெண்கடலுயிர்த்தபரிவாழ்சொரிக
ணீரொன்னவாரமிறையா
நெட்டுடல்விடப்பட்டவரக்கதுவுமேயென
நினைந்துவாய்விட்டலறவுஞ்
சீரேற்றவெண்சம்புவின்கொம்பர்வைக்கநித்
தேனிருளென்றுடனசைச்
சிறுபிடிக்குதவப்பெறுங்கவிபற்றவுந்
தேவர்கள்பிழிந்தெறியவுந்

காரோறகனத்துதித்திராக்கதிரெனக்
கலைவலோர்புகல்வதுண்மை
காட்டுவாளுட்குநாட்டேய்ந்தொழியவின்னேயுங்
கருணையின்வரக்கூவினுள்
ஆரோற்றகுடிலப்பிரான்மகிழ்பிராட்டியுட
னம்புலீயாடவாவே
அம்புவனமும்மைதருசம்புவனவம்மையுட
னம்புலீயாடவாவே. (௬)

சுமையாகமாசுணமுடித்தூங்குகுவலயஞ்
சூழ்தெண்கடற்புகுதியேற்
றேகையிவளீன்றவொருகுழவிகதிர்வேற்படை
சுவற்றுமென்றுளம்வெருவுவாய்
கமையார்தவப்பொதியமுனிவருவனெனவுங்
கலங்குவாய்விண்புகுதியேற்
கருணலயற்குகிழலீயுமவெண்ணுவலின்
கவடுரிஞ்சத்தேய்குவா
யிமையாதமுக்கணப்பரனேக்கினுஞ்சடையி
னும்பொலிதியேலிமைக்கு
மிவள்கரங்கால்படவருந்துவையிவண்சேர்வை
யென்னினிற்கொப்பர்யார்கிற்
கமையாதநலமென்றுமின்றுதுன்றேதியுட
னம்புலீயாடவாவே
அம்புவனமும்மைதருசம்புவனவம்மையுட
னம்புலீயாடவாவே. (௭)

பூவேறுநான்முகப்புத்தேடினோத்தமை
புணர்ந்தமாபாதகமும்வெண்
போதகநடாத்திச்சிலம்புகள்புலம்பவிறை
போக்குங்களுக்கையற்குங்
காவேறுமழைமுகில்கடுக்குமெழில்வண்ணனென்
கண்ணனுக்குங்கொள்பிரம
கத்தியுமகற்றியவொரித்தலத்தின்பெருமை
கருதிலாய்போலுமோரோம்
மாவேறுதேர்க்கதிர்திறக்கதின்னெருதங்கை
வாழ்மனையடைக்குநீயிம்
மானாகபூமியிடைவருதியேயின்றேய்வு
மாறலோர்பெரிதன்றுகாண்
ஆவேறுகொடியுளார்க்காதையேற்றுங்கொடியொ
டம்புலீயாடவாவே
அம்புவனமும்மைதருசம்புவனவம்மையுட
னம்புலீயாடவாவே. (௮)

மனையார்நெடுங்கொடிகளாலகன்விசும்புபடு
மாசொருவுமித்தலனின்மெய்
மாசொருவ்வரிதன்றொர்குழவியாற்கடல்விட்ட
மாவினிதுறங்கச்செயுஞ்
சினையார்நறும்புன்னைநீழல்விரிநின்பெயர்த்
தீம்புனலிராமுழுதும்விண்
டெருவாறலைந்துகண்டுயிலாதநின்குறைவு
தீர்ப்பதரிதன்றுதரணி
தனையாயிரங்கதிர்கொளொளவலித்தருண்மூர்த்தி
தப்புநின்கதிர்கணிறையத்
தருவதரிதன்றிவையுணர்ந்திமயமகளர்யொர்
சங்கமுகிறங்கையுரயென்
அனையாய்நனைச்சூலிமனையாய்ப்பொலிந்தவளொ
டம்புலீயாடவாவே
அம்புவனமும்மைதருசம்புவனவம்மையுட
னம்புலீயாடவாவே. (அ)

சேலையலையெற்றுநெடுவேலையுலகத்தர்வெஞ்
சிகையனற்கொப்புளிக்குஞ்
செங்கட்கடைத்திறற்சிங்கப்பெயர்ச்செழுந்
திங்கட்சிறக்குமொருநாட்
காலைமுதலாகமறுகாலையளவுங்கறைக்
காலொருமருப்புமுக்கட்
கடவாரணம்பூசையயராதுகண்ணுறக்
கடவதன்றென்றிகழ்வதும்
வேலையுமெம்விழிமாதர்முறையிடும்போதுசிறு
விதிதந்தகயரோகமும்
விட்டொருவுஞான்றின்றடுத்ததுகயக்காவும்
வெறுமையேனுள்ளமுந்தன்
ஆலயமெனக்குடிபுகுந்தபெருமாட்டியுட
னம்புலீயாடவாவே
அம்புவனமும்மைதருசம்புவனவம்மையுட
னம்புலீயாடவாவே. (க)

வாவென்றழைக்கவுமுனம்வந்திலையெனச்சினம்
வருங்கொலென்றஞ்சிவல்லுதி
வான்மணிநினைகைநாளியோசண்டதனகமதரவா
மாகணமெனக்கருதியோ
தாவென்றுலாயதெனவணிமணிப்பணியொளி
தழைப்பதுதெரிந்தஞ்சியோ
சற்றிருந்தனென [illegible]
நடைசெய்வாரெனவஞ்சி

சோவென்றபுன்னகையர்பின்னகவராவொன்று
தாண்டினும்போதுமோதுந்
துணையடிமறந்தனைகொலினியெங்கண்மேற்பழி
சொலக்கருதிடேலஃதிலமட்
காவென்றகொண்டன்முன்வரப்பின்வருபூங்கொம்பொ
டம்புலீயாடவாவே
அம்புவனமும்மைதருசம்புவனவம்மையுட
னம்புலீயாடவாவே. (௧௦)

அம்புலிப்பருவ முற்றும்.

---

## அம்மானைப்பருவம்.

விரிநறுவிதழ்ப்பொலிமரைக்கட்பெருக்கெழு
விரைக்கட்குடித்தெழுந்த
மென்சிறைப்பமரங்கண்மேற்கடிதழுக்காறு
மேவிமற்றோர்கமலம்வாழ்
வரியிறைத்தும்பிகடொடர்ந்தெனமுகத்தவிர்நின்
வாள்விழிதொடர்ந்திடப்பொன்
வளர்சடைமுடிக்கூனிலாப்புனையுமெம்பிரான்
வளரிரசிதப்பொருப்பும்
பரியவுரலடியுடைப்பொன்னுலகுவாழ்வீர
பட்டப்பொருப்புநீலப்
பம்பொருப்பாகவொளிபம்பவெங்கினஞ்சிசிப்
பண்புறக்கருடிரண்டோர்
அரியொளிதன்மேற்பாய்வயோலநீலங்குயிற்
றம்மானையாடியருளே
அத்திவனவுத்தமரிடத்தமர்பசுத்தகொடி
யம்மானையாடியருளே. (௧)

பங்கயமலர்ப்பொலியும்வெள்ளிமணிதுள்ளிமீப்
பாய்ந்ததுகடுப்பவமரர்
பைந்தருவிலரிதுகொளுமென்றுநாவற்கனி
பறித்தெறிதலேய்ப்பவலைவெண்
சங்கலர்பெருஞ்சலதிமங்கையிடைதங்கியொரு
தண்சுடரொழுங்கதொப்பச்
சலிலந்திரட்டியதுவிரியாதுதெரியத்
தடக்கைமாற்றுதனிசேர்ப்பக்
கொங்கல[illegible]பரும்பாலசைத்தவொளி
[illegible]பர்தாடவுறழக்
கூட[illegible]லிங்கி[illegible]வெய்யக்

[illegible]
வம்மானையாடியருளே
அத்திவனவுத்தமரிடத்தமர்பசுத்தகொடி
யம்மானையாடியருளே. (உ)

பன்னகநெடும்பாய்க்கருஞ்சுன்முகிற்கதிர்ப்
படலைமார்பத்துமணியும்
பரியவுரலடிமுக்கடாத்தவளயானையான்
பதிவ்தியுமணியும்வாங்கி
மன்னருட்பொலிபுமுப்பத்துமுக்கோடிநப
வாணர்மானவர்யாரொனு
மனநசையுடைத்தெனிற்கொண்மின்கொண்மின்னென
வழங்குதல்கடுப்பவன்னை
நின்னயநவிணையோடுமேல்சென்று
கீழ்படியநெடியகோடீரப்பிரா
னெஞ்சக்கலன்றருமணிக்குவைதிரட்டியெறி
நீர்மைபோன்மென்னடையைவெள்
அன்னமறியத்தணிநடக்குமயிலசெக்கர்மணி
யம்மானையாடியருளே
அத்திவனவுத்தமரிடத்தமர்பசுத்தகொடி
யம்மானையாடியருளே. (௩)

கம்பமிடறுங்கடக்கரியுரியையங்கக்
கபாயெனக்கண்டவெண்டோட்
கண்ணுதல்சடாடவிச்செம்மைநிகராயினுங்
காற்செவப்பானநீகம்
வம்பலருமாம்பற்செவப்பிணையெனப்பொரு
வாய்க்குமிருகைவிரற்கு
மானமாட்டாயென்றெடுத்தெறிவபோலவும்
வெள்வளைமருவுகுணகடலெனுங்
கொம்பனநிளம்மனைநினக்கருளம்மனையெனக்
குலவிப்படர்ந்தபவளக்
கொடியினைவிலக்கியெழுசெங்கதிர்கடுப்பவுங்
குழையினையடர்ந்துமோதும்
அம்பனகருங்கட்பசுந்தோகைசெம்பவள
மம்மானையாடியருளே
அத்திவனவுத்தமரிடத்தமர்பசுத்தகொடி
யம்மானையாடியருளே. (௪)

எங்கள்பெருமானடிமுடிக்காணபல்லனவும்ப
ரெட்டிமுட்டிப்பறந்து
மிருநிலமிடந்துாளிவெய்த்தவரையேய்த்தன
ரெனப்பலநகைப்பளணி

பங்கயனைதம்மனைகைபற்றமு[illegible]
வானாவிருப்பமறையின
வாக்குடையளாதலிற்கைப்பட்டாமுன்னமிக
வவ்வினையெனவுணர்த்தச
செங்கையினுறப்பற்றிடாதுவெங்காமமுஞ்
சினமுமொருவாவொருதவன்
றெளிவந்தமாதவர்முனுணல்போனுணிய
திருப்பெணுடனுண்கொள்ளலின்
அங்கையினுறத்தோடசைந்தாடவனையாட
வம்மானையாடியருளே
அத்திவனவுத்தமரிடத்தமர்பசுத்தகொடி
யம்மானையாடியருளே. (௫)

வேறு.

குரும்பையனையபொம்மன்முலைக்
கொடிநுண்ணிடையார்கொழுநரொடுங்
கூடிக்கலவியயர்ந்துவிரைக்
கொழுநாண்மலர்மென்மாலையொடு
மிரும்பையரவமுயிர்த்தசுட
ரொறியுமணிமாலையும்வெறுப்புற்
றெறியச்சிதறிமறுகினிடை
யிமைக்குமணியைக்குரீஇயினங்கள்
சுரும்பையகலாமலர்த்தருவிற்
றொடுத்தசிறுகூட்டுய்க்கவெழுஞ்
சுடர்போய்த்தூய்மானதவாவி
துன்னுஞ்செழும்பாசடைக்கமல
அரும்பைமலர்த்தும்பெருஞ்சோணாட்
டரசாடுகபொன்னம்மனையே
அமுதப்பெருமாறொடுவரும்பெண்
ணமுதாடுகபொன்னம்மனையே. (௬)

களளமுளரிப்போதின்முகங்
கருகிப்படுத்தசெங்கமல்கழீஇக்
கவிஞறவமலர்மேய்ந்து
கடைவாய்குதட்டும்புனிற்றெருமை
ாமனையவாய்க்குறுத
மடுவையுழக்கிநெடுங்கோட்டு
வளர்தென்னங்குற்றுடற்றினவு
மாற்றவுரிஞ்சவுதிர்பழன்மாத்
துள்ளவுருளொன்றுடைக்கவரி
துன்னுகவருணன்றலைமோதித்
[illegible]
தோட்டுக்கேதலிதலைசாய்க்கும்

அள்ளல்வயல்சேர்பெருஞ்சோணாட்
டரசாடுகபொன்னம்மனையே
அமுதப்பெருமானோடுவரும்பெண்
ணமுதாடுகபொன்னம்மனையே. (௭)

பாரபபுறமுட்கனியிழிந்த
பசுந்தேன்சாறுதிரையெறிந்து
பரவைப்புணரயப்பெருகிநெடும்
படப்பைதொறும்புக்குலவமட
லீரக்கதலிக்குலமுமிடற்
றேந்துங்குலைச்செங்காய்ப்பசிய
விளமென்கமுகுமுதிர்சுவைநெட்
டிலைக்கன்னலும்வானெட்டியப்பால்
வீரக்குலிசப்படைக்கடவுள்
வெய்யதழற்கட்கடைக்காட்டும்
விறன்மாமடங்கலாதனத்து
வியன்மண்டபத்துக்கலங்காரம்
ஆரப்பொலியும்பெருஞ்சோணாட்
டரசாடுகபொன்னம்மனையே
அமுதப்பெருமானோடுவரும்பெண்
ணமுதாடுகபொன்னம்மனையே. (௮)

வாக்கும்பிரசச்செழுங்கொழுநாண்
மலர்பெய்நறவமலர்கொய்யும்
வண்மைத்தருமென்மலர்த்தேன்வாய்
வைத்துக்குடித்துக்குமட்டளிகள்
காக்குந்தகரக்கரியகுழற்
கடவுட்சாதிமகளிர்முலை
கழுவியிழிந்துநெற்சூட்டுக்
கழனிபுகுந்துவண்டலிட்டுப்
போக்கும்வரவுநீக்குமலைப்
புனற்செங்கமலமுகுத்ததுகட
பொதியுங்கரைத்துக்கால்வழிபோய்ப்
புணரிநான்குமொன்றையுமே
டாக்கும்பொழிலார்பெருஞ்சோணாட்
டரசாடுகபொன்னம்மனையே
அமுதப்பெருமானோடுவரும்பெண்
ணமுதாடுகபொன்னம்மனையே. (௯)

புடைக்குங்களபக்குரும்பைமுலைப்
பொலம்பூங்கொம்பரன்னமின்னார்
பொலியுங்கனகவெயில்பரப்பிப்
பரவுமணியின்னொளிர்மலை

இடைக்குங்கடவுண்மயன்மதவெண்
கிரிநாடமைத்துத்தெளிந்தமைத்த
கிளர்கொள்பளிக்குவேதிகைமேற்
கெழுமவிருந்தஞ்சனம்விழிவாட
படைக்குநறுஞ்சிந்தூரநுதற்கும்
பம்பவெழுதியெழுங்கமஞ்சூற்
பசுஞ்செல்லளகமுதறமணப்
பலகுப்பையும்வீழ்ந்தொருவரூன்யா
றடைக்கும்வளமைப்பெருஞ்சோணாட்
டரசாடுகபொன்னம்மனையே
அமுதப்பெருமானொடுவரும்பெண்
ணமுதாடுகபொன்னம்மனையே. (௧0)

அம்மானைப்பருவ முற்றும்.

---

## நீராடற்பருவம்

வேதமொருநான்குநெடுநாட்டுருவியுந்தெரிவில
மெய்ப்பரம்பொருள்வடிவமா
விரிபுனன்மலிந்துளவெனச்செங்கரங்கொடு
வியப்பிற்றிரட்டிடாமே
மாதவனென்முன்னவற்காமென்னமுரிவனை
வாரிக்குவித்திடாமே
மழைமதமொழுக்குகாடக்கறையடிக்கென்றொர்
வண்கோடுநாடிடாமே
தாதவிழலங்கலரமாதர்மான்மதநாறு
தண்டரளமாலைசூட்டித்
தத்தங்குயத்தைநணியெள்ளக்குரும்பைகொடு
தாழைவாணோங்கிநிற்கும்
போதகவனங்குடிபுகுந்தமென்காமர்பிடி
பொன்னிநீராடியருளே
பொருமானைவைத்தகைப்பெருமானைமருவுமான்
பொன்னிநீராடியருளே. (௧)

நிகராறுபிறங்கற்பிறந்துமந்தாகினி
நெடுங்கவலையறவெழுந்து
நிரைமலர்க்கொன்றைத்தாருந்திக்கயுற்கொடிவி
ணேசிக்கவிபுலைநடவா
மகரமுலவுங்கடலினுஞ்சென்றுவிளையாடி
வனசநீலக்குமுதமென்
மலர்பூத்துநின்போலிருக்கதுமலர்வமமை.
வரவேற்றுநின்றவதனற்

ட்காரியசெங்கதிர்ப்புத்தேள்வலஞ்சூழ்
பசும்பொற்பிறங்கலென்னப்
பரவிவலம்வரவெண்டிகைத்தலைவிழுங்கிவின்
பாய்ந்துபொலியுங்கோபுரப்
புகர்முகவனங்குடிபுகுந்தமென்காமர்பிடி
பொன்னிநீராடியருளே
பொருமானைவைத்தகைப்பெருமானைமருவுமான்
பொன்னிநீராடியருளே. (உ)

கயலார்மணிக்குவைகொழித்துச்சுழித்துவரு
கங்காநதிக்குநினது
கரேருயவீருயதுன்மேனிமுழுதுமென்
கண்டோரயயான்பெறுவதான்
மயலார்மலப்பகையலப்பியதலைப்பொதி
மலைக்குறுமுனிக்குமின்று
மகிழ்வெய்துமெனல்போலிரைத்துத்திரைக்கைகொடு
வம்மெனவழைத்தவதனால்
வயலார்மலர்த்தடனுழக்கிப்பழக்குலை
மரத்துத்தகட்டகட்டு
வாளைதாய்வானதிச்சுறவொடுறவாகும்வள
மழைமதக்கரடகும்பப்
புயலார்வனங்குடிபுகுந்தமென்காமர்பிடி
பொனனிநீராடியருளே
பொருமானைவைத்தகைப்பெருமானைமருவுமான்
பொன்னிநீராடியருளே. (௩)

முறைபுகும்வழக்காறிழுக்காதுகோலோச்சு
முருகாத்தியபயன்மகிழ
முடியிலவெள்ளென்பையேகொத்தாரமிட்டவரை
முததாரமிடடவதனால்
மறைபுகுமணித்தாலர்முக்குறும்பற்றவர்
மருந்துணவருதவாயர்
வாழ்த்துவதுமன்றிநின்னொருகளிறுளத்துள்ளும்
வழியொழுகிநிற்பதாற்செந்
நறைபுகுமலங்கலசைதிண்டோளர்மந்தா
நகும்பருஉமார்பமுருவு
நகிற்கொடியர்மாடத்துகிற்கொடிகள்போய்வா
னதிப்புனலைநக்குமொருகைப்
பொறைபுகும்வனங்குடிபுகுந்தமென்காமர்பிடி
பொன்னிநீராடியருளே
பொருமானைவைத்தகைப்பெருமானைமருவுமான்

மழைமாறுறுங்குழற்கடவுண்மடவார்புடை
வளைந்துசூழப்பெருந்தா
மரைமலரிருந்தநறுவிரைமலரலங்கலிரு
மாதர்நின்பாதம்வருடக்
குழைமாறுறுங்கலவைகாசறைச்சாந்திஞெடு
குங்குமமளாயதோயங்
குணகடல்கடந்ததினெழும்பருதிசேப்பமென்
கொம்பர்போலிடைநுடங்கத்
தழைமாவுறுங்கனிநறுங்கனியுகுத்ததேஞ்
சாறுபாய்நாறுநெடுவான்
றடவிப்பசும்புரவிகடவிச்செலுங்கதிர்ச்
சாமரையெனப்படுங்கைப்
புழைமாவனங்குடிபுகுந்தமென்காமர்பிடி
பொன்னிநீராடியருளே
பொருமானைவைத்தகைப்பெருமானைமருவுமான்
பொன்னிநீராடியருளே. (௫)

வேறு.

படைவிழிகண்டுமருண்டுவெருண்டுபதுங்கிக்கயலொழியப்
பணிபணிகண்டங்கண்டகமஞ்சூற்பணிலமூரன்றொழியக்
குடைதொறுமொருபிடியிடையுமிலங்குகுழைக்காதுமபாரீக்
கொள்ளைக்கொடிகணமென்வள்ளைக்கொடியொடுகூடிவணங்கல்கொளக்
கடைவிழிவிடையவர்சடையிவர்மாதைக்காதும்போதுறுதற்
காட்டத்துப்பனவோட்டம்விளர்ப்பக்கருணைக்கொடிநின்றூர்த்
தொடையலர்சென்னிச்சென்னிப்பொன்னித்துறைநீராடுகவே
தும்பிவனத்துறையம்பிகைபொன்னித்துறைநீராடுகவே. (௬)

தூவியனம்பலசூழ்தரநின்றவொர்தோகைமயிற்போலுஞ்
சுடருமுடுக்கணடுக்கணடுத்தவொர்தூமதியம்போலுங்
காவிநெடுங்கணடுங்குமருங்குற்கடவுட்சாதியின்வாழ்
கவின்மடவார்புடைசூழமலர்ந்தொளிர்கருணைக்கொடிநின்றோர்
மேவியதுங்கக்கொங்கைகள்கண்டுபிரும்புற்புதமுடையா
விரியச்சுரிகுழல்சரியப்பிரியபிருங்கலைவல்லோர்செங்
நாவிரிபாவிரிபூவிரிகாவிரிநன்னீராடுகவே
நாகாடவியமர்தோகாய்காவிரிநன்னீராடுகவே. (௭)

மாமயின்மணியுமிழ்சுரிவளைநின்காலரிவளைபோற்குளிற
மண்குழையும்படிவருநீர்ப்பூங்குழைவண்குழைபோலாடக்
கமர்திருக்கையெனப்பஃறிருக்கைகவர்ந்தமுழக்கல்செயக்
கருஞ்சியொதுங்குதல்போலத்தழைகெழுகாஞ்சியொதுங்கல்கொளத்
தேமலரிதழென்வெண்ணகையொளிவிரித்செம்மலரிதழ்வெளிறச்

பூமகளுமகள்கோமகள்பொன்னிப்புதுநீராடுகவே
பூவலர்சம்புவனத்தவள்பொன்னிப்புதுநீராடுகவே. (௮)

வேறு.

சேற்றுமுளைத்தமரைமலர்த்துஞ்செங்கேழிரவிவரவுகவாச்
செறியுஞ்சுடர்க்காஞ்சனநாட்டுத்தெய்வச்சாதிமகளிர்நறு
வூற்றுமலர்க்கற்பகமாலையுயர்தோட்கொழுநருடன்பவனி
யுலவும்பொழுதம்மடமாதருடுத்தநுண்டுசொருங்கநனை
வேறீறுவிதம்பமுதலவுறுப்பெல்லாமெளிதுவெளிப்படலா
லிருகண்புதைக்கவெடிவாளையெறிநீர்த்திவலையெழுப்புநல்லோர்
போற்றும்வளவர்நாட்டரசேபொன்னிப்புதுநீராடுகவே
புழைக்கையடவிதழைக்கவந்தாய்பொன்னிப்புதுநீராடுகவே. ()

காரார்கங்குற்பொங்கர்நெடுங்கமுகிற்றாளத்தாம்பசைத்துக்
காசுகுயிற்றுமுடலூர்சற்கதுவப்பூட்டிக்கழல்வீரர்
வாரார்களபத்தனத்தியரைமருவியிருந்தத்தாம்பசைக்க
வானமளவக்கமுகசைந்தவ்வானத்தருக்கொம்பசைப்பதனூற்
றாரார்குழனின்புகழ்பாடித்தழைந்தாடுவர்களெனநினைந்தத்
தருநாண்மலர்கணணிபொழியத்தண்டேன்பெருகுங்கடிவடிவாட்
போரார்வளவர்நாட்டரசேபொன்னிப்புதுநீராடுகவே
புழைக்கையடவிதழைக்கவந்தாய்பொன்னிப்புதுநீராடுகவே.

நீராடற்பருவ முற்றும்.

---

## பொன்னூசற்பருவம்.

வெள்ளிக்கொழுங்கதிர்விரிக்கும்வயிரக்கால்
வெயிற்றொடநிறுத்தியதன்மீ
வித்துருமவிட்டமிட்டொட்டியெட்டித்தாள
வெண்டாம்பிசைத்தசைத்துத்
துள்ளித்தழைக்கவுமிழ்செங்கேழ்மணிப்பலகை
தூக்கிமலர்மாலைவீக்கிச்
சொற்குயின்மலர்க்குயின்முதற்குயின்மொழிச்சியர்கள்
சூழ்ந்துநின்றனரன்பர்நாத்
தெள்ளிக்கொழிக்குமயமதுரமொழியொடுகொடுஞ்
சிறியேன்சொல்வறியபுன்சொற்
செவியிட்டுநின்றகருணைப்பூங்கொழுங்கொம்பு
செம்புநாயகரிடைக்கட்
புள்ளித்தடந்தோளுடுத்தாடவாட்டினவள்
பொன்னூசலாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பாவை

(௧)

கொடிபூத்ததுடியிடைதுவண்டாடநறவுவிரி
மகோதைவண்டாடவண்டோல்
கொண்டாடவபிரச்செழுங்கால்பசப்புறு
கொழுங்காலதாநின்மேனிக்
கடிபூத்தபச்சொரளிமலர்ந்தாடவெண்ணகை
கலந்தாடவிருகுழையுலாங்
காதாடவூசலாடுந்தொறுமெம்மையன்
கருத்துநின்றூசலாடப்
படிபூத்தவெள்ளப்பரப்பெனவிளைத்துப்
பாந்தெழுங்கருணைவெள்ளப்
பரவையுட்பாடிக்கரங்குவித்தாடியழல்
பட்டமெழுகொத்துருகும்வெண்
பொடிபூத்தமேனியடியாரைநன்காட்டுமயில்
பொன்னூசலாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பாவை
பொன்னூசலாடியருளே. (உ)

மாவந்தமணிமுடியனந்தனுமத்தரவின்
வாருடற்றுவள்வதாங்கு
வாங்குநுண்ணிடைபுவனம்யாவுமசையத்துவள
மதுரம்பழுத்தொழுகுசெந்
நாவந்தசொற்கொடுபெழிச்சுவர்பவக்கடலே
நக்குகருணைக்கடலுள்விண்
ணுடளவவெண்டிரையெழுந்தெனவரம்பையர்கை
நறுமலர்க்கவரிதுள்ளக்
காவந்ததொல்புவியியற்றவுநிறுத்தவுங்
கட்கரியதாயதுகளாக்
காணவுமயக்கவுமளிக்கவுமருட்பொலி
கடைக்கணித்தேவலர்களாப்
பூவந்தவொருவன்முதலவரையுமாட்டுபவள்
பொன்னூசலாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வருமபாவை
பொன்னூசலாடியருளே. (௩)

கூராடுமொள்ளொளியயிற்படைபரித்துவெண்
குறுநகைநிலாவிரித்துக்
குதைவரிச்சிலைவாளெடுத்துக்கடுத்தமர்
குறித்திதழ்கறித்துவருசூற்
காராடுசெடியுடல்கடைக்கண்டூங்குகட்
கண்டையுடைப்படையவுணரா
கவபூமியுட்சிரகரந்தறிபடப்பல

தாராமோர்பந்திறந்தொழுகுசெங்குருதி
சலராசியேழுமொன்றாத்
திடவிப்புறப்புணரியுங்கோப்பவண்டத்
தலப்பித்திதத்திவிழவெம்
போராடுமொருகுழவிதொட்டிறெட்டாட்டினவள்
பொன்னூசலாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பாவை
பொன்னூசலாடியருளே. (௪)

தெள்ளார்பெருநதியைத்தோன்றமுதுகைபபச்
செழுங்குயிறிகைப்பநவிலுந
தெய்வதச்சைவச்செழும்பூங்கொழுங்கொம்ப
செங்கேழெறிக்குமணியாற்
கள்ளார்மலர்ததொடையனுற்றிச்சமைத்தபல
கைக்கனுற்றுடுதோற்றங்
கதிர்மண்டலம்புக்கவமுதமயமானதண்
கதிர்மண்டலத்தையேய்ப்ப
நள்ளாரொனுஞ்சமணர்தழையாதுகுழையாது
நட்டதருவேறமடலோர்
நதியேறவுயிர்களசிவகதியேறமதியேற
நகிலேறுபாலமாளப்
புள்ளார்புனற்புகலிவள்ளற்கருத்தினவள்
பொன்னூசலாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பூவை
பொன்னூசலாடியருளே (௫)

தங்கும்பெருங்குரற்கொண்டலைத்தாங்குமின்
றண்டலைப்பசியபூகத்
தருவிணைநடிப்பபடுங்கவிழிணர்ச்சூதமென்
சந்தனக்காலரும்ப
வெங்குங்கொழுந்தழற்செந்நிறமரும்பிய
தெனததளிரரும்பநோக்கி
யினிதுவந்தொருகுழையிருந்தசைந்தாடுமோ
ரிளங்கருங்குயிலகடுப்பச்
செங்குங்குமச்சேறளாவியகுயப்பொறைச்
சிற்றிடைநுடங்கநெற்றிச்
செக்கட்கருங்களச்செக்கர்வானுடக்ளி
சிறந்திடக்கருணைவெள்ளம்
பொங்கும்படிக்கினிதுலாவுங்கலாபமயில்
பொன்னூசலாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பாவை

தாதார்கடுக்கையணியெம்பிரானபவாணர்
தம்பிரான்முடியன்றுபூந்
தாமரையிடத்தன்முழுவிண்ணுளிமுதலோர்
தரித்துமணிமுடிகளன்று
ராதாரநீயெனவணங்கினர்கொம்மைமுலை
யம்மைபொன்னூசலையுகைத்
தாமெமைபத்தினனிச்சமலர்நச்சடிக
ளம்முடிகளிற்படாமே
காதார்குழைத்தோடிளம்பருதிபொலியவொண்
கமலமுகமலரநாசிக்
கவின்முத்தநிலவுமிழவாயாம்பன்மலரக்
காந்திருசுடர்க்குமஞ்சிப்
போதார்குழற்கருட்கற்றைசுவல்சுற்றிடப்
பொன்னூசலாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பாவை
பொன்னூசலாடியருளே. ௭)

பண்ணியற்கும்பிழையளித்தினியதெள்விளிப்
பாண்முரலும்வரிமிடற்றுப்
பைஞ்சிறையளிக்குலமுழக்கவரமாதர்கைப்
பங்கயம்பொழிமலர்நறுக்
கண்ணியிற்சூழக்கிட்டபதென்னம்மைநின்
கழன்மென்மைகவர்தலைய்ப்பக்
கயல்பசியவள்ளையொடுமுட்டிமீண்டாலெனக்
கண்குழையைமுட்டிமீள
வெண்ணில்பொற்பூவினமிருப்பமுடித்திறந்
திருவிளையர்மனைக்குநாளு
மின்னுவிழைக்கின்றதுன்னியஞ்செங்கா
விதழ்க்கமலமலர்கொடெங்கள்
புண்ணியர்திருக்கண்புதைத்துத்திறந்தபெண்
பொன்னூசலாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பாவை
பொன்னூசலாடியருளே. (௮)

குரவுகமழ்குழலூசலாடுமெழினோக்கிமுக்
குடுமிப்படைக்கையெம்மான்
கோலச்சடாமுடிதுளக்கக்கலங்கிக்
குதித்தோடுமதுபொழுதரா
விரவுகாமுகத்தனிவிதிர்த்திடவதிற்பதியும்
வெண்டலையிமைக்கவிமையா
விழிப்பளிக்கல்கண்டொடேனாநகைக்கின்றதென
[illegible]

விரவுமதித்வழிமயவரைமகளெனப்பிறந்
தெப்பொருப்புங்கைக்கொளா
வெள்ளுதலில்வெள்ளிமலைகனகமலைமகிழ்நர்க்கு
மேனைமாமலைகளியாவும்
புரவுமணியனவிளையன்மைந்தற்குமீந்தபெண்
பொன்னூசலாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பாவை
பொன்னூசலாடியருளே. (௯)

வழியுநறவாறுபட்டறுகாலுழக்கமலர்
மாலைபுனைசீறடியுமா
மணிநூபுரம்புலம்புஞ்சிலம்புங்கட்டு
மறுகிடைச்சேர்ந்தபட்டுஞ்
சுழியுமுவரொழுகழியசலதிவயின்வருமணி
தொடுத்தமணிமேகலையும்விற்
றேன்றெட்டியாணமுந்தொகையில்செங்கதிரெனச்
சுடராதநப்பணிகளுங்
கழியுமொளியுமிழ்வயிரவளைபரித்தடியார்
கலக்கநீக்கபயவரதக்
கையுமொண்டாளமணிநாசியுமணிக்குழைக்
காதுமிருகண்ணுமருளே
பொழியுமலர்முகமும்வடிவழகுபொலிதரவம்மை
பொன்னூசலாடியருளே
பொன்னகர்பொருங்காவைநன்னகர்வரும்பாவை
பொன்னூசலாடியருளே. (௧௰)

பொன்னூசற்பருவ முற்றும்.

---


செய்யுட்காப்புக்கவி ௧௨.
அவையடக்கக்கவி ௧.
பருவம்பத்துக்குக்கவி ௧௰௧.
ஆக கவிகள் ௧௧௪.

அகிலாண்டவம்மை பிள்ளைத்தமிழ்

முற்றும்.

MAHAMAHOPADHYAYA DR. U. V. SWAMINATHA IYER LIBRARY TIRUVANMIYUR MADRAS

டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.



ஸ்ரீ

ஸ்ரீராமஜயம்.

திருஞான முத்திரைக்
கோவை 6. 4164

# நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ்,

பழையசுவடியிலிருந்து,

ஆழ்வார்திருநகரி (ஸ்வாமி ஆதிநாதாழ்வார் ஸந்ந
ஸ்தானீகரும், ஸ்வாமி தெற்குத் திருவேங்கட முடை
யான், அழகர் ஸ்ரீ ராமன் ஸந்நதிகளின் சொந்தக்க
பாத்தியஸ்தர்களிலொருவருமான) பெரியன் தே
மய்யங்கார் என்ற பெரியன் வெங்கிட்டநாராயணய்ய
கார் குமாரரும், திருஞான முத்திரைப் பிரசுராலய
சொந்தக்காரனும், பிரசுரகருமான

பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸனால்,

எடுத்தெழுதி,

பலபெரியோர்களால் பார்வையிடப்பெற்று,
திருநெல்வேலியில் பிரதிமாதமும் பிரசுரமாகும்
ஸ்ரீ வைஷ்ணவன் மூலம்
வெளியிடப்பெற்றது.

1931-32.

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY, TIRUVANMIYUR, MADRAS

ஸ்ரீ:

# முகவுரை.

உண்மைக் கவிகளுக்கு எக்காலத்திலும் ஏற்றமுண்டு. கவிரஸம் ததும்பும்பாடல்கள் எப்பொழுதும் தேவைதான். ஆனால் காலசக்கரம் மாறிவருகையில் கவியின் ரூபமும், ரீதியும் மாறவேண்டியது அவசியமே. ஒவ்வொரு சகாப்தத்திலும் மாந்தரது உள்ளத்தில் துடித்தெழும் அபிலாஷைகளையும், லக்ஷியங்களையும் பிரதிபிம்பித்துக்காட்டுவது அவ்வக்காலத்துப் பெரும்புலவராலேயே இயலும். சங்கப்புலவர்கள் தம்காலத்து மக்களின் உள்ளக்கிடக்கையைச் செவ்வனே வெளியிட்டு வந்தனர். சங்க காலத்து மனிதரின் அறிவுத்தெளிவும், அழகுச்சுவையும் சங்கநூற்களிற் புலனாகும். அந்நூற்களின் சொல்லும் பொருளும் மாத்திரமின்றிப் பாடலின் ரூபமும் மற்றக்காலத்துக் கவிகளிலிருந்து வேறுபடும். இது இயற்கையே.

உண்மைக்கவிதை தைலதாரை போன்று நிரந்தரமாக நிலவிவரக்கூடிய பொருளல்ல. அது ஆற்றின் பிரவாகத்தை நிகர்த்தது. சில காலங்களில் நதியானது வெள்ளங்கோத்து இருகரையும் ஒருகரையாய்ப் புரண்டோடும். சில சமயம் வறண்டு கிடக்கும். அது போலக் கவிதையும் சில சகாப்தத்தில் சமுத்திரம் பொங்குவது போல் உள்ளமடங்காது கொள்ளை கொள்ளையாய் வர்ஷிக்கும். பிறது வேகங்குறைந்து வறட்சிகொள்ளும். இக்காலத்தில் தான் போலிக் கவிதையும், தரக்குறைவான பாடல்களும் மலிந்து கிடக்கும். மறுபடியும் ஒரு தலைமுறையில் நல்லகாலம் பிறக்கும். அப்பொழுது புதிய லக்ஷியங்களும், புதிய முறைகளும் தோன்றும். இப்படியே மாறிமாறி வருவதுண்டு.

சங்ககாலத்திற்குப்பின் செம்பாகமான பாடல்கள் ஆழ்வார்கள், நாயன்மார்கள் அருளிச்செயல்களில் விரவியுள்ளன. மின்னல் ஒளிர்வதுபோல் அவைகளிற் சிற்சில ஒளி வீசிக்கொண்டிருக்கையில் அமுதஜோதியில் கவிதையுள்ளம் வாடி வதங்காமல் தழைத்து வந்தது.

பிறகு தமிழ்மொழியின் பெருமையும், வடமொழியின் மாட்சியும் கலந்து கனிவுற்றகாலம், தமிழ்நாட்டின்—பொதுவாக இலக்கிய உலகத்தின்—புருஷார்த்தம் ப்ராப்தியான கம்பனது காலமே காவியலக்ஷியமே உருவெடுத்த கம்பன் சங்கப்புலவரைப் போல் அகப்பொருளும், புறப்பொருளும் தனிமையாகப்பாடினானில்லை. ஏன்? அவன் காலத்திய லக்ஷியம் வேறு, நாகரீகம் வேறு. அதையே அவன் ஒப்பாருமிக்காருமில்லாத ஒளியும் அழகும், ஒலியும் உண்மையும் விளங்க வெளியிட்டான். அந்த ராமாயணமே தமிழ்நாட்டின் தவப்பயன்—இலக்கிய உலகத்தின் இணையிலாச் செல்வம். கம்பராமாயணம் ராமகதை மட்டுமன்று. பாராயணத்திற்காக மாத்திரம் தமிழர் கம்பனைக் கற்பாராயின், அது சாறிருக்கச் சக்கையை மென்று அவலப்படுவதாகும். கம்ப சகாப்தத்திலுள்ள விவகாரீதியும், தர்மசாஸ்திர ஞானமும், புருஷார்த்த ஸ்வரூபமும், கவிதா லக்ஷணமும் அவனது ராமாயண வாயிலாகத் தெள்ளிதிற் புலப்படும். அதுவே ஆரியர் தமிழர் நாகரீகங்கள் ஒன்றுபட்டிசைந்து, பழுத்தொளிர்ந்த மகோன்னதகாலம். காலத்தின் இயற்கையறிந்த கம்பனும் வேறுமாதிரிப் பாடல்களையும் வேறு வேறு சந்தங்களையும் பொருளுக்கிசையப்புனைந்துவைத்தான். தேவைக்குத்தகுந்த உற்பத்தியென்ற பொருளாதார உண்மையை விளக்கிவைத்தான்.

பின்னர், வெகுகாலம் வரையிலும் கால சக்கரமறிந்த கவிதாசிரோமணிகள் தோன்றினாரில்லை. போன வழியே சென்று மாந்தரை அலுப்படையச்செய்த புலவர்களுக்கோ கணக்கில்லை. அந்தாதி, உலா, கலம்பகவகைகள் வண்டி வண்டியாய்க் குவிந்தன. யமகம், திரிபுமுதலிய ஜாலவித்தைகள் தலைவிரித்தாடின. என்றாலும் கவித்தாகம் தணிந்தபாடில்லை. கவிதாதெய்வத்தின் அழகைப்பருகின கள்வெறி தலைக்கேறி, ஆவேசித்த நிலையில் கவிகளைக்கொட்டும் புலவர் பெருமானைக் கவிதையுள்ளம் எதிர் நோக்கிய வண்ணமாயிருந்தது.

பகவானைப்போல் சுத்த கவிகளும் அவதரித்தே தீர்வர். கம்பனுக்குப்பின் கவிதாதெய்வத்தை ஸாக்ஷாத்கரித்த புலவர்சிகா

மணி பாரதியாராவர். கவிதையின் மும்மணிகளான அழகுச்சுவை யும், கற்பனைசக்தியும், ஓசையினிமையும் அணிபெற வாய்க்கப் பெற்றவர் அவரே. பாரதியார் சுத்தகவி. காவிய எழிலுடன் காலதத்துவத்தையும் பளிங்குபோல் காட்டுகின்றார். நாட்டினரின் மனதை கவர்ந்த ஆசைகளையும், ஆதர்சங்களையும், இனிமையும் சக்தியும் பொருந்த எடுத்துக் காட்டுகிறார். இதைத் தவிரப் புதிய சந்தங்கள், புதிய சொல்லமைப்புக்கள், புதிய ரூபங்கள், புதிய முறைகள், எல்லாம் அவரிடம் பணிகேட்டு நிற்கின்றன. தமிழும், கவிதா தெய்வமும், தேசமாக்காதலும், அவர் கையில் புத்துயிர் பெற்றன தமிழ் நாட்டின் நல்வினைப் பயன் பாரதியாரே. ஒளி மழுங்கிப்போன பழைய மாதிரிகளையும், பழைய முறைகளையும், அவர் பின் பற்ற வில்லை. அழியாத உண்மையை அளவிலாக் காதலை, அறம் பழுக்கு மொளியினைத் தெய்வமாக் கவிதையில் தெள்ளமுதக் கிம்பாவில், பண்சுமந்த பாவனையில் கம்பனை நினை வுறுத்துகின்றார். இதுவே கவிதையின் மாட்சி.

இவ்விதம் நவீன லக்ஷியங்களை நவீன முறையில், நவீன ரூபத்தில் கவிகள் பாடவேண்டுமென்று நாம் சொல்லி வருகையில் பழைய பிரபந்த வகையைச்சேர்ந்த இப் பிள்ளைத்தமிழை நாம் ஆதரிக்க முற்படுவது மேற்சொன்ன கவிதாலக்ஷியத்திற்கு முரணல்லவாவென்று கேட்கலாம்' அதற்கு ஒரே ஒரு பதில் சொல்லி விடுகிறோம். தற்காலப்புலவர்கள் நவீன முறைகளைக் கையாள வேண்டுமென்று வற்புறுத்துகையில் பழைய ஐதிகங்களை அறவே ஒழித்துவிட வேண்டுமென்று கட்டளையிட நாம் முற்படவில்லை. அதற்கு அருகதை நமக்குக்கிடையாது. கவிதா தெய்வமொன் றுக்கே அந்த உரிமையுண்டு. சுயங்கவிகளை அத் தெய்வத்தின் உத்வேகம் எந்தவழியே அழைக்கின்றதோ அங்ஙனமே செல்வது அப்புலவரின் கடன். அழகுச்சுவையும், கற்பனைச் செல்வமும், இனிய ஓசையுமே பாடலுக்குரைகல்லாகும். இச்சோதனையில் வெற்றியுடன் திகழ்ந்த பாக்களே அழியாத செல்வக்களஞ்சியம். இந்த ஸ்புடத்தில் மாசு நீங்கிய பாடல்கள் எந்த ரூபத்திலிருந்தா லும் அவை நமக்கு வேண்டியதே. ஆனால் ஒரு சிலர் காலசக்கரத் தின் அழைப்பை மதியாது பரம்பரை வழியே சென்று உண்மைக் கவிகளாயிருக்க முடியும். கவிதாதெய்வத்தின் அபூர்வ லீலா சிருஷ்டியென்றே அவர்களை நாம் சொல்லவேண்டும். அத்தகைய

யனைத்தையும் இங்கே குறிப்பிடுவது முகவுரையின் வரம்பு மீறிய செயலாதலின் மூன்றினைமட்டும் மேற்கோட்கொண்டு, பொருள் நயமும், சொல்லணியும், சந்தப்பொலிவும் புனையப்பெற்ற இந்நூற் களஞ்சியத்தைச் செவிச்செல்வம் வாய்ந்த நமது வாசகநேயர் களுக்கே ஏகபோகமாய் விட்டுவிட்டு, இத்தகைய பாடல்கள் எந்த ரூபத்தில் இருந்தால்த்தானென்ன? என்ற வினவோடு இச்சிறு முகவுரையை முடிக்கின்றோம்.

சலதிதரும் கொளிகுலவு கயங்களில்வளர் டானந்சேரத்
தமரமிடும் பலபடுகர் தொறுஞ்சிறுசங் கோடும்போகிப்
புலரி வலம்புரி குலவு கயங்களில் மண்டுகந்தாவிப்
பொதியவிழ்பங்கய நறவுகவிண்டலர் தின்டாடுந்தாழ்பட்
டலதிபுடம்பிடை புதையவிளம்பெடை நெருண்டோடும்போகித்
தலைவனுறங்கிய வயனி குலைந்திட வண்டாடுஞ் சோலைத்
திலக வளம்புனை குருகை கெடுந்தகை செங்கோ செங்கீரை
திரிபுவனம் புகழ்பெறு முது பண்டித செங்கோ செங்கீரை.

மன்றலெழுப்பிய சோலையிலாலையில் வண்டலை தண்டலைவாய்
மாழிகையிற்புனை சூளிகையிற்பெரு மண்டப வாயிலெலாந்
தென்றல் மணத்திலிருந்து பசுங்கிளி செஞ்சிறு பூவையுடன்
திருமொழியொடு திருவாய்மொழிபேசுக தென்குருகூர்கூருகூ
ரென்றுபிழற்றுவ கூகையுங் கின்பதி யிதொரு தெய்விக
மென்றிசையத்தில் மகிழ்ந்தினி தெம்பெருமானருள்வாயெனவே
குன்றமெடுத்த பிரானடி மௌலிய கொட்டுக சப்பாணி
குருகைவரோதய திருமகிழ் மார்பின கொட்டுக சப்பாணி.

ஞாலமுழுது மழுக பொலிய ஞானமதலை வருகவே
நாதமுனியு மதுரகவியு நாயமெழுத வருகவே
வாலவடிவ சரிதை கிரிகை மாறன் வருக வருகவே
வாயிலமுத மொழுகி யொழுகு மார்பில் வழிய வருகவே
கோல மதுரை வதரி பழையகூடல் பிரதி சுருதிதேர்
கோவலாவ மருவு பாமர் கோயில் தொழுது வருதுநா
மாலயிலையில் மருவுகருணை யாழி மகிழ வருகவே
யாரமசைய யசையமதலை யானை வருக வருகவே.

கடைசியாக, இந்நூலைமிக்க முயற்சியின் பயனாய் முதன் முதல் வெளியிட்டுதவிய ஸ்ரீ. உ. வே பெரியன்—வெ. நா. ஸ்ரீநிவா ஸய்யங்கார் ஸ்வாமியின் தமிழன்பும், தொன்னூலாராய்ச்சித்திற னும், பரோபகார சிந்தையும் தமிழகத்தின் நன்றியறிதலுக்கும், ஆதரவிற்கும் பெரிதும் உரியன.

சிவகங்கை, 13—2—32. | வாணிதாஸன்,

4184(9081)

ஸ்ரீ

# நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ்.

குறிப்பு:- ஆழ்வார் திருநகரி, திருஞான முத்திரைப் பிரசுராலய
காரியஸ்தன் பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாசனால்
பழையசுவடியிலிருந்து எடுத்தெழுதப்பட்டு
ஸ்ரீ வைஷ்ணவன் பத்திரிகை மூலம் பிரசுரிக்கப்பட்டது.

அன்பன், பெரியன், வெ. நா. ஸ்ரீநிவாஸன்.

## நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ்.

### பாயிரம்.

1. தேனாரு மகிழ்த் தொடையலு மெனலியுந்
திருக்கிளர் குழைக்காதும்
கானாரு மலர்த் திருமுகச் சோதியும்
கயிரவத் துவர் வாயும்
மோனமாகிய வடிவமு மார்பமும்
முத்திரைத் திருக்கையும்
ஞான தேசிகன் சரண தாமரையுமென்
னயனம் விட்டகலாவே. (1)

2. பாராத கல்வி ப்ரபந்தப் பொருளனைத்தும்
நேராக முன் வந்து நிற்குமே — போராது
தேவிறு கொண்ட திருமாலை முத்தமிழ்தேர்
நாவிற னைத்துதித்த நாள். (2)

3. என்றுந் திருமாற்கே யாளவே னெம்பெருமான்
என்று மெனக்கே பிரானவான் — என்றும்
பிறவாத பேராளன் போரா யிசமு
மறவாது வாழ்த்துக வென்வாய். (3)

MAHAMAHOPADHYAYA Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
MAHAMAHOPADHYAYA ... LIBRARY

## காப்பு.

பூ பாரமன்பதை களிகூற வருபெரும்
பூதூர் தழைத்து மலியப்
புகழ்தருஞ் சித்திரைத் திருவாதிரைப் பரம
புண்ணிய தினத் தவதரித்
தாபாசவறுசமய வேரறுத் தெட்டெழுத்
தாதி முதலென்று கூறத்
தாழ்வான் மதித்தருள வாழ்வானதற் சரண
மபிஷேகம் வைத்தருளினார். (4)

---

## நூல்.

## காப்புப்பருவம்.

1. கார்கொண்ட திருமேனிப் பசும் பொருப்பினடுவே
கதிரெறிக்கு மின்போலக் குடியிருக்கு மொருத்தி
தார்கொண்ட முலையழுந்தித் தழும்பிருந்த மார்பத்
தனிப்பெருநாயகக் கடவுள் சரணமலர் தொழுவாம்
சீர்கொண்ட மணிமாடந் திகழ் குருகூர் நங்கை
திருவயிறு வாழவந்த திருக்குழவி மாறன்
பார்கொண்ட மறை நூலின் பயன்கொண்டு தமிழ்நூல்
பாடவல்ல பெருமாளைப் பராங்குசனைக் காக்கவே (5)
கோபாலர் தொழுபெரிய பெருமாளரங்கர் தம்
கோயிற் றிருப்பதி முதல்
ளுந் திருப்பதிகள் யாவுந் தழைப்ப நங்
குழக னழகிய நம்பி முன்
சீபாடியஞ் சுருதி வேதந் தனக்கரு
ளிராமாநுசற் றொழுதுமெஞ்
சிறிய சொற்புன் கவிதை சீபராங்குச முனிவர் (4)
திருவுள முவந் தருளே. (5)

2, பொதியுமிதழ் வீடு தாமரைக் கோற்றொடி
புணரு மணிமார்ப மாயனைத் தாட்சுடர்
புவனி பதினாலு மூடுறத் தாக்கிய
பொருளை யவிராழி வாள்வளைக் கோட்டொடு

முதிய கதை வேணு வார் சிலைத் தோற்றிய
முகிலை யுறிதேடி வீடு புக் காய்ச்சியர்
முறுவல் செயவாடு நீள் குடக் கூத்தனை
முருகு வனமாலை நாதனைப்போற்றுதும்
கதிய மதகூடு பாய்புனற் சேற்றெழு
கமல மண நாறு வாவியைப் போட்டுகழ்
கடிய நெடுவாளை பாளையைத் தூக்கிய
கமுக மடல் பீறி யுறுபட் டேற்றிடை
குதிகொள் மதுவாச நீருடைத் தாற்றிடை
குமிழி யெழவோடி மேலிடப் பார்ப்பொடு
குருகு கரையேறி யேதெனப் பார்த்தெழு
குருகை வரு காரி மாறனைக் காக்கவே. (6)

3. நறைகம ழிதழி தாங்கிய வேணிக்காட்டிடை
நதி செருகிய புராந்தனை மூரிப் பேய்ப்படை
நடமிட வினிய தாண்டவ மாடிக் காட்டிய
நவையறு கெவுரி காந்தனை மாறித் தூக்கிய
அறை கழலிசையி லோங்கிய ஞானக் கூத்தனை
யயனிடு சொலவு வேண்டிய சாபக் கோட்டியை
யடுமொரு குழகர் பூந்தொடை மார்பக் கோட்டக
மழகெழ வினிது தோய்ந்தருண் மாதைப்போற்றுதும்
உறைபடு தயிரை மாந்தி யுபாயப் பேய்ச்சியை
யுறவொடு மருவி வாந்தவமாகிக் கீழ்ப்பட
வுயிர்நிலை பருகி வாங்கிய மாயச் சூழ்ச்சியி
னுளமலி கருணை யின்னுயிர் சேரக் காத்திடை
மறைதமிழிசை களாம்படி பாரிற் றேற்றிய
வரதனை நறவு தேங்கிய தாமப் போர்க்கழி
மகன் மகனியம மோங்கிய வாசத்தோட்டவிழ்
மகிழ்புனைபுய பராங்குச மாலைக் காக்கவே. (7)

4. மட்டவிழ்ந்த துழாய்த் தொடை மற்புயன் பரமேட்டியை
வைத்த சிந்தை வரோத்தமன் வட்டெழுந்தமுதூட்டியல்
தொட்டளந் திரு தாட்டொழு சுத்தநங்குரு கூர்ப்புயல்
துப்பிளங்கனிவாய்ச் சிறுசொற் பெறும்படி காப்பன

நெட்டுலைந்த பலாச்சுளை நெக்குடைந் தொழுகாக் கழை
நித்திலந் தெரியாக் கயல் நித்தல் விண்டுகெளாப் பல
புட்டழுங்கி யெழாச்சில புட்பமண்டப வாய்க்குடி
புக்கிருந் திசை தேக்கிய பொற் குறுங்குடி மூர்த்தியே. (8)

5. பரமவைகுந்தையி லொருதனியொண்சுடர்
வரகுண மங்கையில் மாமணிக் கார்க்கடல்
பரவு புளிங்குடி தொலைவில்லி மங்கல
முகில் பதுமந்த குலோசனக் காட்சியர்
வைரமுனி பெண்கொடி தொழுத குளந்தையில்
மரகத மன்பினர் மாநிதிச் சேர்ப்பினர்
வருணன் வணங்கிய மகரநெடுங் குழை
மணிமுது குன்றுறை பேரையைப் போற்றுவம்
அரவம் வெகுண்டெழு கணைபணை பந்தியில்
நடன விதந்தரு நீள்குடக் கூத்தினன்
அகிலமு மண்டமு மெவைகளு மிந்திரிய
மனைகளு மின்றிய நாளிடைத் தோற்றிய
சுரர் புவனம் புவி கடவுளர் மன்பதை
சுருதி தரும் பெரியோனை முற்பூத்தவர்
துளவணி புங்கவர் பரிபுர பங்கய
துணைமுழுகுஞ் சடகோபனைக் காக்கவே. (9)

6. இருபுடை யொளிரு மடுபடை வெயிலு
மெயிலெழு நிலவும் ப்ரகாசித் தார்ப்பன
எழுபுவி நடுவு திரிதரு திரிய
வெறிசுடர் வெகுண்ட பானுவைக் காட்டுவ
ஒரு விழி பருதி யொரு விழி ஞெகிழி
யொரு விழி யொழுகுங் க்ருபாநிதிப் பாற்கடல்
ஒருபுற முதிய திகிரியினுருவ
மொருபுற நரசிங்க ரூபனைப் போற்றுதும்
பொருதிரை யுததி மொகு மொகு மொகென
நடுதறிநடு மந்தராசலப் பூட்டுறு
புழைபடு முரகக் கயிறிறை சுலவி
யருளமுதியலின் சொலாயிரத் தாற்றரு

4154

குருபரா னியமடி குணபர னுபய
 குலவரன்வளர் சந்த்ரசோதியைத் தேக்கிய
குளிர்முக வனச மெழுதிய திரும
 ணழுகொழுகிய செஞ்சொன்மாறனைக் காக்கவே. (10)

7. மாடமீட்டிய வீதிநாற்றிசை வாவுதாட்கொடி யேழ்
வாசிபூட்டிய தேரையோட்டுவ வானநாட்டமர் வாழ்
வீடுகாட்டுவ போல்விடாப் புகழ்வீசுநாற் குருகூர்
வேதம வாய்த்தருள் மாறனைத் தருமேனி காத்தருள்வார்
ஆடல்மாக்களி கூரநோக்கிய வாதிமூர்த்தியன் மா
லாழிகோட் டொடுசாபம் வாட்கதை காவலாய்ப்புடைசூழ்.
சேடன்மேற்றிரு மாதர்போற்றிய சேயதாட் பெரியோர்
சேசுநாட்டமர் வாசநாற்றிசை சேனைகாப்பவரே (11)

8. விழிக்கட் பொங்கழற்கக்குஞ் சினத்துக்கிறந்தே வீட்டிக்கொண்
 டெயிறுமுறுகிய பாந்தளைக் கிழ்ப்பட
மதித்துத்தன் கிருபைக்கட் பங்கயத்தைக்கொண் டிரட்சிக்குந்
 கருணை வருண பதாப்புயக் கூத்தினர்
தெழித்துச்செந்தயிர் கட்டுண்டுரற் கட்டுண்டருட்சுற்குங்
 குழவிம தமுதுதுஙகலைக் காத்தவர்
திருச்சக்கிரத் தடக்கைச் செங்கடற்கடகந்தனிப் பொற்றண
 டரியவரிசிலை யாந்துதித் தேத்துவஞ்
சுழித்துத் தெண்டிரைத் தத்துந் தடத்திற் பங்காத்திற்
 குமுறி வரிவளை யீன்ற முத்தூற்றிருள் [கண்
சுருட்டிச் சந்திர வட்டத்தின் கதிர்சுற்யுந் திருச்சுற்றுங்
 கனக மணியணி காஞ்சனத்தாற்கொடி
கிழித்துப் பைம்புயற் பக்கம் பிலிற்றித் தண்டுளிக்கற்பங்
 கமுகமடல் வழிபாய்ந்தெழப் பார்ப்பொடு [சுற்றுங்
கிளிக்கும் பஞ்சரத்திற் செஞ்சிறைப் பொத்தும் பொழிற்
 குருகை நகர்வரு மேந்தலைக் காக்கவே. (12)

9. உரகபண முடிமேற்றுயி லொளிமணி மேக சிலோர்சய
வொருதிரு நாபியில் மூர்த்திய வுணர்வரி தாய்மறை கூப்பிடு
பரமவியூக முலாக் கனிபருகி விடாமல் விடாய்த் தெதிர்
பாவுதிராவிட நூற்பொதிபழமறை யோனிசை காப்பவன்

அரவகிரீட பணைற்பவ வயிர்பணி யாயிர வாய்த்தழல்
அலர்கதிரோ னொளிகாட்டிய வணிவின தாசுத சித்துவன்
வரமலி வானவர் நாட்டிடை மணியணி கோபுர மேற்செலு
மதின்முடிமேல் வடகீழ்த்திசை வளர்கருடாசலமூர்த்தியே.(13)

10. இருநிலஞ்சே ரடைவு நெடு விசும்பூடுருவி
யெழுதருங் கார்க்கடவுளா
மெவர்களுஞ் சேர்வ ரொரு கிழங்கர மொளியை
யிதைய பங்கேருகம் விடா
தருகியொன்றுன சுவை பருகிளம்பால னமு
தமிழ்தரும் பாவினிசைதே
ருருபெரும் பாவலவன் மகிழலங்கார னரு
ளுறுதி கொண்டாளுவனதேன்
மருவிருஞ் சோலை செறிகுருகை தண்சேறை கடன்
மலை செழுங் காழி யுறையூர்
வரிசை வண்பேர்புருடை திருவழுந்தூர் புதிய
வதரி தண்கா வுறைகுவார்
திருவரங்கேசர் திருமலையலங்கா ரணி
திருவுளம்பாடி நகரார்
திருவனந்தேச ரழகிய குறுங்கேசரிவர்
சிறியசெஞ் சேவடிகளே. (14)

11. செம்பொற் பிராகாச நவரத்னராகக் கிரண
சித்திர வித்தார சிகரத்
தெய்விக விமான காவற்கட வுளாகவும்
செய்தொழிற் பகுதியில்லா
மும்பர்க்கு மெட்டாத வெப்பிரா னும்பரொடு
முலகுநியமித் துலகிடத்
துயிரை நியமித்தருள வயனைநியமித்திடுமு
ளொருவரிவ ரென்ன வுளவோ
கப்பக்கடா சயில வுலகமிக் கவிதை
காவற் கடவுளின் றென்பராற்
காவற்கு மிக்கடவு ளியாவர்க்கு மிக்கடவுள்
கடவுளெவருக்கு முதலா

வம்பொற்கிரீட வண்டுளபனே யெவையுமா
யவனலாற் றெய்வமில்லையா
லாழ்வாரை யெங்கள்குலவாழ்வாரை நங்குருகை (15)
யாதிநாதன் காக்கவே.

காப்புப்பருவ முற்றும்.

---

## செங்கீரைப்பருவம்.

1. ஒரு மந்தரப் பரிய சயிலந் தரித்துததி
யுதயங் குழப்பிய பிரா
னுலகுண்டடர்த்துவெகு பகிரண்டமுட்டவிடு
மொருபங்கயத் தறிவுதோய்
கருமந்தரித்து மனனகமொன்று பட்டுணிய
கருமஞ்சலித்து மறைநூல்
கழறும் பரப்பிரம வொளிகண்டு தத்வநெறி
கரைகண்டருட் பகுதியால்
வருமிந்திரியக் கருவிதனை வென்றழுக்குடைய
மலமந்தனைக் குடில் புகா
வழிதண்டமிழ்ச் சுருதியமுதம் புகட்டியதி
மதுரந் தெவிட்டி யெழவே
திருமந்திரக் கவள மிசையுங் குழக்களிறு
செங்கீரை யாடியருளே
திருவாய் மொழிப் புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரை யாடியருளே. (16)

2. பஞ்சரப் பலவித விகார மோகித முடைப்
பஞ்ச பூதிகளின் வகையைப்
பகுதி செய் தறிவினைப் பிறிதி படுவித்த தொரு
பரம ஞானக் குழவியே
வெஞ்சமத்துத் தரித்துத்திரி தருந்திகிரி
வித்திலமுத்தித்த சுடராம்
விரிசடைக் கடவுளுந் திசைமுகத் தொருபரனும்
வேறு வேறுருவு மடைவே

அஞ்சனக் கிரிவுருவி யொன்றாகி யொன்றான
  வண்ட கோடிகளின் வெளிரூ
டந்தகாரத்தைவிட் டந்தரியா மித்துவத்
  தப்புறப்பட்ட பரமச்
செஞ்சுடர்க் கதிர் வயிரவொளி விடுஞ்சிறு பால
  செங்கீரை யாடி யருளே
திருவாய் மொழிப்புலவ குருகூர் நகர்க்கிறைவ
  செங்கீரை யாடியருளே. (17)

3. சலதி தழங்கொலி குலவு கயங்களில் வண்டானஞ்சேரத்
  தமரமிடும் பல படகர் தொறுஞ் சிறுசங்கோடும்போகிப்
புலரி வலம்புரி குலவு கயங்களில் மண்டூகந் தாவிப்
  பொதியவிழ்பங்கய நறவுகவிண்டலா திண்டாடுந்தாழ்பட்
டலதியுடம்பிடை புதையவிளம்பெடை ஞெண்டோடும்போகித்
  தலைவனுறங்கிய வமளி குலைந்திட வண்டாடுஞ் சோலைத்
திலக வளம்புனை குருகை நெடுந்தகை செங்கோ செங்கீரை
  திரிபுவனம் புகழ்பெறு முது பண்டித செங்கோ செங்கீரை

4. வெங்கட் பணி மகுட காகோ தரத்தினெடு
  மேகோ தயக் கடவுளால்
வேதப் பரம்பரம வாதிக் குறுங்குடியுள்
  வேரித்துழாய் நிமலர் பாற்
றங்கட்கு மகவாசை பெரிதான காரியார்
  தகவுடைய நங்கையுடனே
தருமநெறி யுறவந்து தவமுயலு மதுகண்டு
  தனி நாயகப் பெருண் மகிழ்ந்
தங்கட்கு மகவாகி யாமுலகில் வருதுமென்
  றுற்பவித்தருளி யுலகத்
துயிர்முழுது மீடேற வுபநிடத நான்மறையை
  யோராயிரத் தமிழினால்
செங்கட்பராபரனை யறிவித்த சிறுகுழவி
  செங்கீரை யாடியருளே
திருவாய்மொழிப்புலவ குருகூர் நகர்க்கிறைவ
  செங்கீரை யாடியருளே. (19)

4154

5. ஆதி நான்முக புராணங்கலியுகாதியி
லகண்ட லோகாதி பதி வந்
தருமறைத் தமிழ் புகலுமென வுரைத்திடு நெறியி
லவதரித்தருளுமளவிற்
போத ஞானக்கிரண வாத போதய சோதி
புவியிருள் தொலைத்தெழுதலாற்
பொங்கு நீர் வடதிசை கங்கையிற் கண்ட பிற்
றென் திசைப் புவனத்து நம்
வேதநாதக் கடவுள் வெளிவந்ததென வென்று
விடைகொண்டு மதுரகவிபால்
விழிதிறந்தெதிர் கண்டுபோய் நின்ற ஞான மேல்
மெய் நின்று மொழியருளியோய்
சீதநாண்மலர் மகிழ்த்தொடை மார்ப சடகோப
செங்கீரையாடி யருளே
திருவாய்மொழிப் புலவ குருகூர்நகர்க் கிறைவ
செங்கீரையாடி யருளே. 20

6. வரிசை வைகாசியிற் றிருவிசாகத் தினிய
வாரமொரு புகரில் நெறியாய்
வளர்பக்க மூவைந் திலங்கி யெகின யோகத்து
வந்தவதரித்தளவிலா
வரிசையாரமுதுண்டு திருமுலைப்பாலமுத
முண்ணாமல் நண்ணாதபே
ரொளிகண்ட கண்பிரியில் வெளியுண்டு போமென்ன
வுள்ளஞ்சி நயனமூடிப்
பரிசன முராரி திருநாம பாராயணம்
பழுதுபடு மென்ன வெருவிப்
பவளவாய் திறவாத ஞானபோதக மதலை
பரமவானந்த நியமத்
தரிசனவரோதயக் கவிதை யமுதக்குழவி
செங்கீரையாடியருளே
திருவாய் மொழிப்புலவ குருகூர்நகர்க்கிறைவ
செங்கீரை யாடியருளே 21

7. ஞாலத்தை யுண்டு துளிராலிற் கிடந்து துயில்
ஞானக்குழந்தை வடிவா
நாரணன் கேசவன் சீதரன் தேவகி
நந்தனுல கூடுருவு தாட்
கோலக்குறுங்குடியுள் வேதக்கிழங்கு மன்
கோலக்கொழுந்து பழமைக்
குழகனழகிய சோதிவெள்ளத் தெழுந்த தொரு
கோதிலாவமுது பருகிப்
பாலிற் பிறங்குகனி தேனைப் பிழிந்தமுது
பாயத்தயங்கு சுவையின்
பாகிற் பிறந்த சுவை யுருகித்திரண்ட தொரு
பரிமளக் கவிதை யமுதை
சீலத்தரும்பு மகிழ்மாலைச் செழுங்குழவி
செங்கீரையாடி யருளே!
திருவாய்மொழிப் புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரையாடியருளே. 22

8. மூவாத முழுமுதற் கப்புவிட்டிப்புற
முழுப்பரப்பிற் கெழுமியோர்
மும்முதற் சுடருமா யெம்முதற் பொருளுமா
மூலநடு வீறாகி நின்
றோவாத வுயிர் பலபடைப்பது மளிப்பது
மொழிப்பது மியன்று பரமா
முடலினுக்குடலாகி யுயிரினுக் குயிராகி
யுணர்வினுக் குணர்வாகியோர்
மாவாய் பிளந்து வரு கோபால கோளரியை
வானவர் கொழுந்தை யகலா
வானநாயகனை யணிவான மாமலையை பொளி
வளரிந்த்ர நீலகிரியை
தேவாதி தேவனைத் தேடுஞ் செழுங்குழவி
செங்கீரை யாடியருளே
திருவாய் மொழிப்புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரை யாடியருளே. 23

9. வாடாத புட்பமுகிழ் சூடாத சித்ர மலர்
மலராத வும்பலதள
மதியாத ரெத்ன மலை வுதியா மதிக்குழவி
மடியாத வெக்கு தீபம்
கோடா மதக்களிறு குதியா வரிக் குருளை
கொதியாத சித்திர பானுக்
கோவாத முத்தி னொளி தீவாத தத்வநெறி
குறையாத பொற் ப்ரவாளம்
பீடான நித்ய குணயோகா சனத்தறிவு
பிறழாத முத்து நிலயம்
பேராயிரக்கருணையோ ராயிரப் பனுவல்
பிரசப்ரவாக சயிலந்
தேடாத பத்ம நிதி வீடாத புத்தமுது
செங்கீரையாடி யருளே
திருவாய்மொழிப் புலவகுரு கூர்நகர் கிறைவ
செங்கீரையாடி யருளே. 24

10. இருமுலைப்பால் பருகியிடை மகட் பேதைமடி
யேறுங் குழந்தை புவியோ
ரெழுந்திருப் பவளவாய் கொண்டடக்கு முகி
லெதிர்கொண்டெடுத்த வடுபே
யொருமுலைப் பால் நெருடி யொருமுலைப்பால் பருகி
யுயிர்குடிக்குங் கடவுள் வந்
துலகினுக் கருள்கூரவணி திருப்புளி நீழல்
யோக பரனு மளவிலோர்
கருமுலைப்பா லமுத முண்ணுமா னண்ணுத
கருணைமா கடல் குளித்துக்
கமலவாய் மலர்கொண்டு கவிதை நான் மறைகொண்டு
கண்கொண்டு பரம வுருவத்
திருமுலைப் பாலமுது செய்துவளர் சிறுபால
செங்கீரையாடி யருளே
திருவாய்மொழிப் புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரையாடி யருளே. 25

...ாய
...சாமிநாதையர்

11. கோடாத மணி மகுட மாயிரத்திற்கு வளர்
கோடாயிரம் படைத்துக்
கோபவிட விழிகால்வ தலதுதற் சேர்விடங்
குளிரத் தழைத்தருள்வதாய்
நீடாழிகுல வுலக பாரந் தரித்தற்கு
நெருமிர்தலைப் பூபாரமாய்
நெடுநிலா வெயிலது மறைத்தலால் மதிவெயிலை
நிமிர்கொம்ப ரிலை மறைத்துத்
தோடார் துழா யரியை மேவலா லிசைகொண்டு
சுழல வரியென்று முளவாய்த்
தூயமுதளித்தகயிறுதலாலின் றிவன்
சொல்லமுதளிக்க நிழலாம்
சேடாவதாரத் திருப்புளி நிழற்பரம
செங்கீரையாடி யருளே.
திருவாய் மொழிப்புலவ குருகூர் நகர்க்கிறைவ
செங்கீரையாடி யருளே. 26

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

## தாலப்பருவம்.

1. வாயின் வாய்ச்சுவை தேனே பாலே போல்வார் நீண்
மானேர் நோக்கியர் சோளா யாளாய் வாழாதே
வேயின் வீக்கிய தோண்மேல் வாணாள் வீணாள் போய்
வீதல் சித்தெமை யாள்வாய் தாலோ தாலேலோ
கோயில் காட்கரை நாவாய் மூதூர் பூதூர் வாழ்
கூடல்பாற் கடனூர் மோகூர் சேர்வாரார்
தாயில்வாய்த் தநியானா ரூடாதாலேலோ
தாமநூற் சடகோபா தாலோதாலேலோ. 27

2. பாறல் கீழ்ப்பட மேலாய் நீள் கோடீறுவோர்
பாழிமாக் களிறேறேடே போராய் நேராதார்
மீறல் போக்கிய மாமால் தாண் மேனாண் மீதே
மேவுபோர்க் கழிபோா தாலோ தாலேலோ

தேறல் வாய்ப்படு தேனீ நீர் வாவி யூடே
சேலுறுக்கயல்பாயா வீயா வீழ் தேனு
ரூரல் நீர்க்குருகூரா தாலோ தாலேலோ
வோது நூற்சட கோபா தாலோ தாலேலோ. 28

3. கோவை சேர்த்தணி மேலா மாலா வாலோலா
கோதிலாச் சுடர் மாறு மாறு நாவீறு
வேவுறுக் குண ஞானு லீலா தூலா வோர்
மேனி காட்டிய மாலே தாலோ தாலேலோ
காவி நேத்திர மானே டானு மாமால் கூர்
காரியார்க்கொரு சேயே பேயே னுயேனோர்
நாவில் வாக்கிய தேனே பாலே தாலேலோ
நாமநூற்சட கோபா தாலோ தாலேலோ! 29

4. பொருத பராக்கிரம விகட விராக்கதன் மீளா வேறோர் தோளோடே
புனைமலரோச்சிய மகுட சிலோச்சய மேரோர் கூறுவேறா
றொருசிலை பூட்டிய வடிசமர் வீட்டினர் தார்போ லோராறீறுறு
யுமிழ்திரை தேக்கொலி யிருகரைதாக்கிய நீணுடேசூழ்பெழ்வாய்
வெருவரு தீப்புகையெழுமுது பாப்பணைமீதே நீர்தோய் கார்போலே
விழிதுயில்மூர்த்தியை வழிவழி யேத்திய நாவோய்பாவோர் தேவா
தருமலிபூப்பொழிலணிகுருகூர்ப்பதிவாழ்வே தாலோ தாலேலோ [வோர்
சமயவரோத்தம வுபய குலோத்தம வாழ்வீர் தாலோ தாலேலோ. 30

5. இருளியாய்ப்புளி கிழா வேவேழும் பாராய் வே
றெவையுமாய்த்தனி நீயே யானு யானாய்
அருளியாக்கும் பூதா கேண்மோ வேனுநா
லமுதமீத்தருணு வோய் தாலோ தாலேலோ
முருகுறுக்கழி நீர்மேய சாரா நாகோரா
மூலையினூழ்த்திய பாலா றேசேர் கால்வாய் பாய்
குருகை நாட்டவர் கோவே தாலோ தாலேலோ
குதலைவாய்ச் சடகோபா தாலோ தாலேலோ. 31

6. மாசிலாச் சுடர்போல் வாய் மேவாய் நோலாதென்
மாழ்தல் போக்கிய தேவே கோவே காவே நேர்
தேசு காட்டிய நானு பேதா வாதாரா
தேருநாற் கவி நூல் சேர் பேயார் பூதாழ்வார்

வீசுதார்ப் பெரியாழ்வார் வாழ்வே யாழ்வார் தோய்
வேதநூற் றமிழ் தேனானூறுறுநா
றோசை யூட்டிய நாவோய் தாலோ தாலேலோ
வோதுநூற் சடகோபா தாலோ தாலேலோ. 32

7. விடரின் மணியொளி யெற்றிய குறவர்
மடவரல் தாழ்ச்சிறு சொருறுதார் வாரோர் பால்
விகட நெடு முதுமாப்பகடிமிழ் மதமழை
வீழ்ப்பன் மேலாறுறெழ் கானாறு
யடர்வழி சுழல் கூப்பிடு பரியவரைய
பலாக்கனிவேர் வீழ் தேனோர் கீழாறு
யரவநுகர் பகுவாய்ப் புகநெடிய சிகரிய
பூக்கொடிவானோரூர் சூழ்காவூடே
படருமிட பசிலோற்பவ வழகா பரிபுர வாற்றெழு
நீர்வாய் மூழ்கா வேழ்பார் தோய்
பழைய வடிமுடி நாப்புகழ் கருணை பொழி
முதுவாய்ப்புலவோனே காரூடாடாதே
தடவுகொடி மதிறூட்டிய குருகை வளமலி
நாட்டெமர் கோவே தாலோ தாலேலோ
தமிழின மறைமொழி பாட்டிடை பரம
பதநெறி காட்டிய வாழ்வே தாலோ தாலேலோ. 33

8. வரிநெட்ட கடழல்வாய்ப்படு கயிரிட்டெரு கிரி
நாட்டிய மானீரூடே வானோர் தாம்
மகிழத்தனி யமுதூட்டிய கருணைப்புயல்
பரமேட்டியை கீர்காறீபார் மேலாமா
லருமைச்சுடரொளி மூர்த்தியை யுயிர்கட்கொரு
பரமாய்ப்படு வாசார் மாலாலாராய்வா
ரடியற் ககவிருள் போக்கிய கவிதைக் கதிர்
விரிபாற்கர ஞான சாரா வாசாரா
தெரிசிப்பவர் மனமெட்டகல் வயகித்தவ நெறி
யொப்பிய சால்வாய் கால்வாய் நீராலே
தெளிவித்திருவுரு கீற்றெழு விளையிற்பயிர் விளைநாற்கதி
வாழ்வோராளா வேளாளா

4154

சரிதைக் கிரிகை நெறிபாற்படு பிறவிக்கடல்
கரையெற்றிய நாவாயோனே தாலேலோ
தமிழ்மறைக்கருகுரு கூர்ப்பதி மகிழத்தொழு
தெழுதாட் சிறுமாலா தாலேலோ தாலேலோ.

9. பேயே னளவுக் கெளியா யறியாய் பெருமாள் திருமார்பிற்
பேதைக் களிகூர் சேனைப்பெருமாள் பிரியாதருள்ஞானச்
சேயே யழகுக் கழகா வொருவா தெளிதற்கினிதாகித்
தெரியச்சுருதிப் பொருளைத் தருசொற்றிருவாய் மொழி
நீயே யருவாயுருவாய்வருவாய்நினையா நினைகிற்பாயோனே
நிலவுஞ்சுடர்சூழொளியே வெளியே நெடியோயடியேனற்
றாயே யெனவன் றுருகுங் குழவீ தாலேலோ தாலேலோ
தவநாவலவர் திருநாவுடையாய் தாலேலோ தாலேலோ.

10. கத்துந் தமரத்திமிரக் கடலை கனகக்கிரி மத்திற்
கடுநெட்டுரகக் கயிறிட்டுறுக கடைதற்கடி. கோலிச்
சித்தங் களிகூ ரமரர்க்குருகித் தெவுளா வமுதீனுந்
தேவுக்கமுதக் கவிநாவுதவுந் திருநாவலவோனே
குத்துங்கரைவீழ் கசிவிற்பாவிற் குவைநீர் வலையத்திற்
குரவப்பொழிலிற் சமுகக் கமுகின் குலையின் றலையிற்றிற்
தத்துந்துறைசூழ்பொருனைத்துறைவா தாலேலோ தாலேலோ
தவநாவலவர் திருநாவுடையாய் தாலேலோ தாலேலோ 35

தாலப்பருவமுற்றும்.

## சப்பாணிப்பருவம்.

---

1. விறலுடை புலவையிலொருதனி மகவொடு மற்கடமுற்போத
விரிதிரை யெறிகடல்மறுகிடவடுகணை தொட்டதிரிட்டேகி
மறலியும் வெருவரு நிருதனையடுபானுக் கொரு சொற்றாது
வழிபட வருளிய பொருமுது புல்மைய கொட்டுகசப்பாணி
யறல்படு தொகைகளு மிழிபடவிருகரைமுட்டி யெடுத்தேறி
யலைகடறிடர் படவயன் மணியிணர் மலர்புற்பதநெற்சாடி
குருமுனி தாவருபொருனைய துடையவகொட்டுகசப்பாணி
குரைதரு பரிபுரகுருகைய ரதிபதி கொட்டுகசப்பாணி 36

2. இடிபட விருமரு தொரு சிறுபுற வடியிட்டெதிர் நெட்டோத்
திமிலுடை யெழுவிடை யடுவணி கவர்தலை நெட்டெரியப்போகித்
துடையடி வெருவா வர மணிகரமலர் தொட்டோர் விட்டேறித்
தொடுவெணை தயிரிழுதமுது செய்வன விதம் விட்டொழுகிப்பாய
வடிவழி களவிடை குறுகிய தொறுவிய ரொக்கலுமுற்கூடி
யனைகயிறெடு பிடியடியெனவவர் மனநெக்குறுகிச் சோரக்
குடநட மிடுமடி தொழுகர மலர்கொடு கொட்டுக சப்பாணி
குரைதரு பரிபுர குருகைய ரதிபதி கொட்டுக சப்பாணி 37

3. விழுபொழு தெழுகதிரென முழுமணியலை யப்பிய பொற்கோடி
வியலிய நெடுமதிளிடை மலி கதலிகள் மட்டறவிட்டால
விழுமெனவசைவன வருகென வருகென மொய்ப்பெனவெய்ப்பாறி
யிமையவர் தொழுதெழு குருகையிலெமதிறை கொட்டுக சப்பாணி
செழுமதி ளிடைவிய வடமலை கடன்மலை வித்தகர் கத்தூரித்
திலகமுமழகொழுகிய விதுதிருமுக புட்கரணிக் கோயிற்
குழகர் தம்மடியிணை தொழுமடல் மழலிடை கொட்டுக சப்பாணி
குலமறை தமிழ்செய்த குருகைய ரதிபதி கொட்டுக சப்பாணி. 38

4. நவைபடு புலன்வழி புகருடை யடுபிணி வைப்புறு கொட்டார
நவவழி யுறுகுழி புழுவொழுகிய குடருட்கிய பொய்க்கூடு
சுவையறு வகை நுகர் சுமைகொடு திரிபவர் பட்டிகைகெட்டோட
சுருதியி னியலமுத ருளிய விசைபழி கொட்டுக சப்பாணி
தவமுய லமரரை யெதிர்கொள வென திமிர்முத்த நிரைக்கோவை
தடமலர் சுனைமலரகிலிடு புகைமுகில் சுற்றிய பொற்சோலைக்
குவை கொடு வளர்முது தொடரிய மலையவ கொட்டுக சப்பாணி
குரைதரு பரிபுர குருகைய ரதிபதி கொட்டுக சப்பாணி. 39

ழுலவிதழ் மதிமுக விருளையர் தொழுதெழ வட்டிகை கட்டாரத்
திறுகிய விளமுலை வனிதையர் படிபொருனைத் துறைவிட்டேறி
மலர்படு கரை யயலுடை தருமடு வினில் வட்டையிடைத்தாழ்வின்
மடைநடு விடவிய மதகிடு புடைபெயர் மட்டவிழ் நெட்டோடை
யலர்மது வொழுகிய வுயவையின் கழியில மொக்கலினுட் கால்வெட்
டனுழுடை யுவள கவள வயலிடை கதிர் முற்றிய நெற்றுளிற்
குலவரி வளை தவழ் குருகைய ரதிபதி கொட்டுக சப்பாணி
குரைதரு பரிபுர பதயுக மதலைப கொட்டுக சப்பாணி. 40

6. துரகத ரதமுத லெழுதிகை விழுதிகை யுட்பட முற்கோலி
சுழல்கிரி யெழுகிரி யுலகொரு பொகிலிடைவைத் தருடற்
[சோதிப்

பாகதி குடிபுக வருதிருமதலைய கட்புலனட்காமற்[சோதிப்
பணிபவர் சிலதியர் பவமற வருபவ கொட்டுக சப்பாணி
மரகதவிரதன மணியணி விருசிகை வித்துரு மத்தாம
மதலிய மறுபத முரளிய சரவதி கட்டிய பொற்றேரை
குரகதமென வினிதுடையவ வதர்கொடு கொட்டுகசப்பாணி
குலமறைதமிழ்செய்தகுருகையரதிபதிகொட்டுகசப்பாணி

7. சடமொடு பழகிய வெமதக நுகரிய முக்கனியக்காரச்
சதுமறை யெனுமிய லமுகெழு மதிமுக பற்பவிதழ்பீடப்
படர்திகை புகுமத கருணிய மலமடை சட்டகமெட்டாமற்.
பரகதி நெறிமுறை யறிவுற வருபர தத்துவ வித்தாரச்
சுடர்முடி முரணிய விரணியனடுதறி தொட்டறையப்பீறித்
துடையிடை படவவனடு வுரமுகிர் கொடு தொட்டட னெட்டூரக்
குடர்கொடுதொடையிடுபரனடிமௌலியகொட்டுகசப்பாணி
குலமறைதமிழ்செய்தகுருகையரதிபதிகொட்டுகசப்பாணி

8. மழையிலிருண்டு சுருண்டு கவிந்து வளர்ந்த திருக்குழல் சூழ்
மதிமுகமுஞ் சிறுதிரு விரலாழியும் வட்டணி லச்சினையும்
தழையுமுடைச் சிறுகிண்கிணி தொங்கு சதங்கை துழங்கொலி
தாவடமும் புனைதோள் வளையுஞ் சிறுதண்டை நூபுரமா[யும்
மிழையுமலைந்து புலம்பி யலம்ப வெழிற்றிரு மண்சுட்டா
விட்டநுதற்கிடை கட்டிய சுட்டியு மிட்ட பவுத்திரமுங்
குழையு மசைந்து குலுங்கி வருட்படி கொட்டுக சப்பாணி
குருகை வரோதய திருமகிழ்மார்பின கொட்டுகசப்பாணி 43

9. பரசமைய குஞ்சரப்பஞ்சானனம் பொருபரசமய திமிர்பானுப்
பரசமைய சயிலவச்சிராயுதம் பரசமய பரவையின் வடவானலம்
மரமறையினுபநிடத திருநாமமிருநாலுமம் திரவுபதேச வானால்
மாயாவாதிகள் சாருவாக வாதிகள் காதிவருகமணவாதியர்களா
மிரணமுக மஞ்ஞானகரமடையவே தறித்திகல்வென்று சமயநிலையிட்
டிலையாழ் வாரானவெதிராச முனியெனுமிராமானுசன்றனக்குச்
சரணமலர் வீராபிஷேகம் வைத்தருண்மதலை சப்பாணி கொட்டியருளே
சதுர்வேதமுறதியான்வடைவோதசடகோபசப்பாணிகொட்டியருளே

10. மன்றலெழுப்பிய சோலையிலாலையில் வண்டலை தண்டலைவாய்
மாளிகையிற்பிணை சூளிகையிற்பெரு மண்டப வாயிலெலாந்
தென்றல் மணத்திலிருந்து பசுங்கிளி செஞ்சிறு பூவையுடன்
றிருமொழியொடுதிருவாய்மொழி பேசுகதென்குருகூர்குருகூ
ரென்று மிழற்றுவ கூகையு நின்பதி யிதொரு தெய்வீக
மென்றிதையத்தில் மகிழ்ந்தினிதெம்பெருமா னருள்வாயெ
குன்றமெடுத்த பிரானடி மௌலிய கொட்டுக சப்பாணி[னவே
குருகைவரோதய திருமகிழ்மார்பின கொட்டுகசப்பாணி. 45

11. தண்டை சதங்கை புலம்பவெருண்டு தவழ்ந்து தவழ்ந்துசெலத்
தாயரெடுத்து மடித்தலை வைத்தவர் தழுவநெகிழ்ந்தொருகாற்
பண்டிநெகிழ்ந்து குழைந்தமுதம் மொழிபவள விளங்கனி நீர்
பைந்தமிழாயிரம் வேதமனத்தொடு பாண்மணநாறி யெழும்
புண்டரீகானன மண்டலநாம நிலாவொளி பொங்கி யெழப்
பூண்மகரக் குழைதோளசையப் புரிநூலசையச் சிறுபொற்
கொண்டையின் மாலை குலைந்தசையும்படி கொட்டுக சப்பாணி
குருகைவரோதய திருமகிழ்மார்பின கொட்டுக சப்பாணி. 46

சப்பாணிப்பருவம் முற்றும்.

## முத்தப்பருவம்.

1. ஒளிரு முணர்வு முயிரு முடலு மொருவு மறிவும்பெற்றுமேல்
உலைவு மிலைவு மலைவு மெலைவு முளது மலது மற்று நால்
தெளியு மொளியு மிருளு மனையதெருளு மருளு மற்றதோர்
தெரிய வரிய பரமவுருவு சிவனு மயனு மற்றுமாய்
வெளியினளவில் விமல கமல முகுளம் விரிய மொட்டுரு
விபுல வடிசை முடிவில் சுடரின் விளைவை யளவிமுத்திகூ
ரளியில் மருவு குருகை யெமர்களரசு தருக முத்தமே
அனக னதுல னமல னியம வறிவினருள்க முத்தமே.

2. அகலி லகலு மணுகி லணுகு மளவின் மலியு மற்பமா
மறிய வரிய பரம பிரம பரனை யறியுமெய்ப்பிலே.

பகலு மிரவுமடியி லறிவுபடியு மிதய வுத்தமா
பவள நடுவி லமுதமொழுகு பருவ தருக முத்தமே
நகில யுகள வடிவு தடவி நடுவு கவிகை விட்டதார்
நளின மரும மருவு குருகை நகரி லரிய பச்சை மால்
புகலு மழகுதொழுத வழகு புனித தருக முத்தமே
புதிய சுருதி மொழியு முதிய புலவ தருக முத்தமே. 48

3. புகடுபடு பகிரலகு நெடுகிய குருகினுடலது விட்டுவாய்
புகைய விட மடுமுரக சுடிகையிலொளிறு முழுகனலக்கவே
பகடுதுணிபட விகடமிடு சகடுடைய பிணையடி யிட்டதோர்
பதுமயுக முகில் பரமபதமுறை பரமகுண மணிமுத்தமே
தகடுபட விடு கனக நவமணி தழுவிவிடு கொடிகட்டவே
சலதி பருகிய வெழிலி வயிரெதிர் தடவியிட மறமுட்டவான்
முகடுதொடுமதிலொடு யகுருகையின்முதல்வனருளுகமுத்தமே
முதியபழமறைபொதியுமியலிசை மொழியுமகவருண் முத்தமே
49

4. அலைபொருமெறிதிரையெழுபெருநரலையின் வளைமணியுவமென நச்சியே
மஞறியகதிர்படமுனிபடுகழைமணியவைசிவனிடமெனவுட்கொளோமணி
நிலைபடுமுளரியில் விளைமணி சதுமுகனிடுதவிசெனவதுதொட்டிடோம்
திமிர்சுறவிடைமணிவிபரிதாதிபதி துகிலிகையெனவதுகைக்கொளோம்
விலையறு கனமணிமினல்பொதியுருமொடுவிளைமணி யெனவவைமெய்த்
[திடோம்
விரிதரு பொருனையில் வரிவளையுகுமணி யரிதலமெனவவையிட்டிடே
முலையமுதருளுது மியலமுதொழுகிய முகமுளரிய வருள் முத்தமே
முதுசுடர்பெருகியவொருகடல்பருகிய முழுமுதல் மகவருள்முத்தமே
50

5. பிருகுமுனி தருமதலை மழிசையரதிபன் மறையவர் வைத்ததோர்
பிணமு மெதிரவர் மொழியு மியலுடை நிபுணனடி தொழும் வித்தகா
அருகசமையமுமிரிய வெருவிய யவனர் கிளையொடு புத்தர்போ
யடவி குடிபுக நடவு கவிமத வசல மகவருண் முத்தமே
வருடை குதிகொள விரலையொடு மிளவருண் முறைசிற புக்கில்வாய்
மதலையென மதியுழையை வினவிய தொடரி நெடுமணி வெற்பனை
முருகு கமழ்தரு வகுளமது மலர்முதல்வ னருளுக முத்தமே
முதிய பழமறை பொதியு மியலிசை மொழியு மகவருண் முத்தமே.
51

6. மழையி னிருள்புரை சுரியல் விடுசுருள் வளைய வழுவன சுற்றலால்
வளருமுக மிதுபதுமமென மதுநசையினறுபத மொய்த்ததுபோல்

விளையுமழகிய கெழுமவள விருநடுவு சுடர்விடு முத்தவாய்
விரவியொழுகிய யமுதரதமொடு தருகவொரு திருமுத்தமே
பழைய பிரமனும் வெருவவருமிரு நிருதர் பதியுடல் மட்கவே
பவனவெகு புனல்சுவறு செறுவிடைவடிவ னடியிணையுற்பவா
முழையின் மணியொளிர் தொடரி நெடுமலை முதல்வனருளுக முத்தமே
முதிய பழமறை பொதியுமியலிசை மொழியு மகவருண் முத்தமே 52

7. ஐந்துபொறிக்கு மெறித்த மயக்கமருத்து நிறுத்தி வெகுண்டவ
லலமருட்கடல் புகுது மனத்தை யழித்தறிவுக் கறிவைத்
தந்து திருத்தி வருத்தி யிருத்திய சரிதை முதற்கிரிகை
தத்துவ ஞான குணத்ரய நிக்ரக தற்குண பூஷணனை
யெந்தை மனத்தை யிணக்கி வணக்கி யெவர்க்கு நினைப்பரிதா
யினிய பரத்துவ வடிவமுரைத்துல கெவையு மருட்டறவே
வந்து திருப்புளி நீழலுதித்தருள் மதலையளித்தருண் முத்தமே
மாறன் செந்தமிழ் வீறன் பங்கய வதனன்றந் தருண் முத்தமே. 53

8. முத்தின் றிருச்சட்டைமுத்தின் றிருத்தொங்கல்முத்தின் கிரீடமருளவே
முத்தம்பதித்தபவளச்சிவிகைகவிகை திருமுற்றந்தனிற்கொணருவோந்
தத்தும் பிரபைக் கிரணவயிர வயிடூரியச் சாயமாத்தொகை தருவோந்
தமனியத்தகட்டித்தனதுபொற்கோயிலுந்தானமும்பொன்மேய்குவோ
புத்தம் புயத்தரிவை பொற்குங்குமக் களப பூதரச் சுவடழுத்தும் [ம்
பொன்மேனி நீலமுகில் பற்பராகச் சரணபுட்பராகச் சோதியாற்
சித்தங்களித்து வருதிருவாய் மொழிப்புலவ திருவாயின் முத்தமருளே
தேனொழுகுபெரியதிருவந்தாதிமணமொழுகுஞ்செம்பவளமுத்தமருளே 54

9. மன்னுசீர் வாமனு மதுசூதனு மாய மாதவா பூதங்களாய்
மதிவெயிற்சுடருமா யுடலெடுத்துயிருமாய் மற்றுமாய் முற்றுருவுமாய்
நின்னிலே யுருவாகி நின்னிலே யருவாகி நிகரிலா வெகு ரூபமாய்
நினைவாகி நினைவித்து நியமாகி நியமித்து நீயாகி நிற்றலறியா
வென்னையானுள் மதித்துன்னையே தொழுதெடுத்தென்னை யானறிகின் [றிலேன்.
யானேது வாய்வந்து நீயே நினைப்பாடியேகிய வித்தனையெனச்
சென்னிநீள்முடியாய கன்னல்பாலமுதுண்டதிருவாயின் முத்தமருளே
தேனொழுகுபெரிய திருவந்தாதி மணமெழுந்திருவாயின்முத்தமருளே 55

முத்தப்பருவ முற்றும்.

## வாரானைப்பருவம்.

1. அரிய திருமொழி பெரிய திருமடலளையு மவர்தொழ வருணர்கா
ணழகர் திருமலை பழையவடமலை யறிஞரடி யுறைதருணர்கா
ணரியுமறு கரமுரலு மலரிடியிவர்க ளெவரென வறிதியோ
விரவு பகலடி பரவு சிலதிய ரெவரு மகிழ்தர வருகவே
பெரிய கழையுகு மரிசிகழிசியா பெருகு வரையா வனிதைமார்
பிரசவுலை நடுவெரியு மணியொளி பிறழவெருவிய நறவுநீர்
சொரியுமலர் கொடுதனிய விடுமொரு தொடரிமலை யவன் வருகவே
துளப மௌலி யனமுத கவிமறை சொரியும் வரதன் வருகவே. 56

### வேறு.

2. கதிக்குங் கதிரொறிக்கும் பலகலைச் சந்திரனவனை நீ
களிக்கும்படி யழைக்கின்றனை கருத்தின்படி கொணருவேங்
குதிக்குந்திரை புரட்டுங்கரை குமட்டுங்கடல் வயிறு தீ
கொழுத்தும்படி திருச்செஞ்சிலை குனிக்கும் புயல்மறுகு சேர்
துதிச்சங்கொலி தருச்சங்கணி துறைச்சங்கொலி குமுறவே
சுருப்பின் கணமருப்பந்திகள் துணுக்கென்றெழு குருகைவாழ்
மதிக்குஞ் சிறு குழக்கன்றிள மணிக்கன்றெதிர் வருகவே
மறைச் செந்தமிழ் வடிக்குங் கவிமதக்குஞ் சரம் வருகவே. 57

3. ஞாலமுழுது மழகுபொலிய ஞானமதலை வருகவே
நாதமுனியு மதுரகவியு நாமமெழுத வருகவே
வாலவடிவ சரிதை கிரியை மாறன் வருக வருகவே
வாயிலமுத மொழுகி யொழுகு மார்பில் வழிய வருகவே
கோல மதுரை வதரி பழைய கூடல் பிரிதி சுருதி தேர்
கோவலாவ மருவு பரமர் கோயில் தொழுது வருதுநா
மாலமிலையில் மருவுகருணை யாழி மகிழ வருகவே
யாரமசைய யசைய மதலை யானை வருக வருகவே. 58

4. அதிவிகட முடைய பரசமைய வெகுளியவுணர்மிக வெருவ வருகவே
யறிஞரகவிருளை யிரியுமெழுபுரவி யருணரவி கிரணன் வருகவே
முதியவினை தொலைய நியமகுணநெறியின் முறைமைகுடிபுகுதவருகவே
முனிவருள மகிழ வெமது மன நெகிழ முறுவலழ கொழுகவருகவே
பொதியுமிதழவிழ வழியு நறவொழுகு புதியமலர் வனச வனிதைதோன்
புணருமுகிலொளியைவெளியையறிவரியபொருளையெதிர்பருகியுருகி
மதியைநிகர் வதனகருணை யலையெறியுமதலை யெமதரசவருகவே | வாழ்
மதுரகவி யெழுத மதுரகவி பொழியு மதுரமதகளிறு வருகவே. 59

5. இடவிய படிக வறைமிசை தவழ வெழுநிழன் மதலை வருகெனு
விளநகை யருளி யிளமொழி யருளி யிருகையி லொருகை யுறவிலே
தடவிய பொழுது வருகில வெனவோர் தனிவிழி பிசையி லதனை நீ
தழுவிட வருகு கொணருவ மினிய தளர் நடை பயில வருகவே
புடவியின் மனிதாவராவரறிவு புளகித மெறிய நெறியிலா
புகவிழு கொடிய படுகுழி நரகு புதலெழ மறைகொடமுது தோய்
திடமெழ முதிய தமிழறி குழவி திருமத மழலை வருகவே
தெரிசன முறைமை நிலைபெற வுனது திருவருள் பொழியவருகவே.
60

6. ஒருகை விரலு மிதழு மமுதமொழுகி யொழுகி வழியு நீ
ரும்மு நறவு மகிழு நனைய வுதர நடுவினிடை புகா
விருகை பதிய வுகள சரணமினிது தவழுமளவில் வீ
ழிரதகுளிகை யனையதுளிக ளிவைகள் பழுது படுபவோ
குருகை வாத விரத நியமகுழவி சிறிய மழலை வாய்
குதலைமொழியு மிளைய களிறு குலவிவருக வருகவே
வருணகிரண வருண ரவியின் வடிவ மதலை வருகவே
மறையினிசையி லமுதகவிதை மதுர மதலை வருகவே. 61

7. அறுபதந்தருந் துளவிலங்கவந் தருள்பொலிந்து நின்ற மருமொருபா
னருகிருந்துகொண்டெமைமறந்துடம்பயருகின்றதொன்றுணர்கிலையுன
திறுகுபண்டியுங் குழைவதென் கொல்பொங் கிரதம்விண்டபைங் கனி
[யொடமுதிவை
யிமைதிறந்துசெம் பவளமுந்திறந்திவையிலொன்றுகந்தமுதுசெய்யார்
சிறு சதங்கையும் பரிபுரங்களுங் கலகலன் கலெனவரை மணி [யிணி
திகழ வொன்றேடொன்றடிபடுந்தொறுந்தெரியல்சிந்தவந்தணைகமடி
லுறுபெருந்தவங் கெழுமுதொண்டுகொண்டுலகிறைஞ்சுமெங்களிறுவருக
[வே
யுடைய நங்கையின் கருணைகண்டு கொண்டுள மகிழ்ந்து நின்றருக
[வருகவே.

8. தெரிசனமுறைமை நிலைபெற வுனது திருவருள் பெருக வருகவே
செடிபுகுமுதா மடுவுறி செனன செடமல மகல வருகவே
பரிசன முனிவரடியவா பரம பதநெறி யறிய வருகவே
பழகிய சுருதி மொழிகொடு புதிய பலகலை மொழிய வருகவே
புரிசையு முடியு மிடிபட வாசு புரமெரிகதுவ முதியவாய்
புகைகெழு நிருதர் குடிகெட நெறுவு பொருசிலை யவனினிடைவடா
வரிசையிலறிவு முழுகிய குருகை வரபதி வருக வருகவே
மணிவட மசைய வரைவட மசைய மழமதகளிறு வருகவே. 63

வாரானைப் பருவமுற்றும்.

## அம்புலிப்பருவம்.

சந்திரபுட்கரணியிடை யென்று நீ சேர்கின்றதவநிலைக்கருள்
செய்தவநீ
தம்பிரானைப் பழையவும்பர் நாயகனை மெய்த்தமிழ்பாடு
மவனிவனின்காண்

இந்திரற்கரிய திகிரிப்பரமரிவனேதுமியலுக்கு மயலாகிவந்
திந்தத்திருப்புளிவிலைக் கொருவராய் நின்றதின்ன நீயறி
யாய் கொலோ

மந்தரப்புவிவாழ ஞானமுத்திரை கொண்டுவந்தவதரித்த
வொளிகாண்
மறையைப் பிழிந்தினிய வமுதொழுகு கவிபாடவல்ல
பெருமாளிவன் காண்

அந்தரத்திடை யிழிந்தருகு வந்துள மகிழ்ந்தம் புலியாட
வாரே
யாழ்வார்கள் தம்பிரானெம்பிரானுடன் மகிழ்ந்தம் புலி
யாடாவரே.

---

கல்விப்பிரான் அருளால் சுவடியில் கிடைத்த பாகங்கள் சுமார் 65-யும் வெளிப்படுத்தியிருக்கிறது. பாக்கியும் அவனருளால் கிடைத்து வெளிவரத்திருவருள் முன்னிற்குமாக.

ஸ்ரீராமஜெயம்.

# நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ்

## பிழை திருத்த விபரங்கள்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 2 | 5 | தாபாச | தாபாத |
| ,, | 8 | 4 | — |
| ,, | 16 | — | 5 |
| ,, | 17 | வது வரி முதல் 24-வது வரி வரை 8 வரிக்குப்பின் சேர்த்துப் படிக்க. | |
| ,, | 21 | தனக்கரு | தனக்கருள் |
| ,, | 22 | ஸிராமா | ஸீராமா |
| ,, | ௸ | மெஞ் | மென் |
| ,, | 24 | தருளே | தருளவே |
| 3 | 9 | தாங்கிய | தூங்கிய |
| 4 | 30 | மந்தராசல | மந்த்ராசல |
| 5 | 13 | துக்கிறந்தேவிட்டி | துக்ரந்தெவிட்டி |
| ,, | 19 | சக்கிர | சக்ர |
| ,, | ,, | செங்கடற்கடகந் | சங்கடற்கட்கந் |
| ,, | 23 | சந்திர | சந்த்ர |
| 6 | 7 | சேர்வர | சேரவர |
| ,, | 24 | யில்வர | யிலவா |
| 7 | 13 | மிந்திரிய | மிந்த்ரிய |
| 8 | 29 | குளவி | குழவி |
| 9 | 11 | மேல் | மென |
| 13 | 25 | மேய | மேய் |
| 14 | 6 | தாழ்ச்சிறு | தார்ச்சிறு |
| ,, | 21 | கயிரிட்டெரு | கயிறிட்டொரு |
| 15 | 27 | பொருணை | பொருனை |
| 17 | 1 | [சோதிப் | |
| ,, | 18 | தண்டைநூபுர | தண்டையுநூபுர |
| ,, | 25 | மந்திர | மந்த்ர |
| 18 | 2 | பிணை | புனை |
| ,, | 11 | மொழி | பொழி |
| ,, | 12 | மனத்தொடுபொரண் | மணத்தொடுபொரன் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 19 | 12 | வயிரெதிர் | வயிறெதிர் |
| ,, | 18 | விபரீதாதிபதி | விபரீதரதிபதி |
| ,, | 27 | வருண்முறை | வருணமுறை |
| 20 | 2 | யழுத | யமுத |
| ,, | 4 | செருவிடை | செலுவிடை |
| ,, | 7 | மெறித்த | மெரித்த |
| | 15 | மருளவே | மருள்வோ |
| ,, | ,, | மருத்து | மறுத்து |
| ,, | 17 | மாத்தொகை | மாத்தோகை |
| ,, | 18 | தகட்டி | தகடடி |
| ,, | 22 | மொழுகுஞ் | மெழுஞ் |
| 21 | 3 | ணாரியு | ணிரியு |
| 22 | 1 | வறை | வரை |
| ,, | 11 | தவழு | தழுவு |
| ,, | 20 | செய்பார் | செய்யவர் |
| | 22 | வொன்றேறுடொன் | வொன்றெறுடொன் |
| ,, | ,, | மடியிணி | மடியிணி |
| ,, | 26 | மடுவுறி | மடுவுறு |

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

ஸ்ரீ ராமஜெயம்.

# திருஞான முத்திரைக்கோர்வை.

---

1. உபயகவியப்பா இயற்றிய ஸ்வாமி நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு ... 0—4—0

2. அனந்தாசாரியாரியற்றிய ஸ்ரீ சடகோபன் சந்திரகலாமாலை .... ... ... 0—1—0

3. ஸ்ரீ உ. வே. தேவராஜய்யங்கார் என்ற தேவேசபாரதிகளியற்றிய ஸ்ரீசடகோபதிவ்ய சரித்திரம் 15 படலங்களில் சுமார் 1200 திருவிருத்தங்களடங்கியது .... ... 2—0—0

4. திவ்ய ப்ரபந்த பாசுரப்படி ஸ்ரீராமாயணம் இனும்.

5. தொலைவில்லி மங்கலம் தேவர்பிரான் பேரில் ஸ்ரீ உ. வே. தேவராஜய்யங்கார் என்ற தேவேசபாரதிகளியற்றிய சந்திரகலாமாலை. 0—1—0

6. நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ்

ஆழ்வார்திருநகரி திருஞான முத்திரைப் பிரசுராலய சொந்தக்கார காரியஸ்தன் (சுவாமி தெற்கு திருவேங்கடமுடையான் சுவாமி அழகர் ஸ்ரீராமன் சந்நதி சொந்தக்காரரும் ஆதிநாதராழ்வார் சந்நதி ஸ்தானீகருமான பெரியன் தேசிகமய்யங்கார் குமாரர்) பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாசனால்

எடுத்தெழுதி

திருநெல்வேலி தெற்குப்புதுத்தெரு, ஸ்ரீ வைஷ்ணவன் (மாதஸஞ்சிகை) பத்திராதிபர் T. R. பெரியநம்பியாபிள்ளையவர்கள் தமது பத்திரிகை மூலம் பிரசுரித்து வெளியிடப்பட்டது.

1107—ம் ளூ ஐப்பசிமீ

MAHAMAHOPADHYAYA,